REGISTERED No. M. 120.

ओं.

JNÂNA BODHINI.

A TAMIL MAGAZINE AND REVIEW.

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.

EDITOR:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

Vol. VII. Nos. 11 & 12.—November & December 1904.

CONTENTS.

PAGE.

I. THE "MADRAS LITERARY BUREAU,"—EDITOR ... 361

II. ORIGINAL ARTICLES—

1. Natural History II—**V. N. Iyengar, M.A.** ... 366
2. The argument of Valayapathi—**M. V. M. Mudaliar, B.A.** ... 369
3. A Tour Round the World—**C. S. Ambal** ... 371
4. Recent Archæological Researches in S. India—**Swadesamitran** ... 377
5. Agricultural Education—**S. J. M.** ... 380
6. On the Twelve Names of Tirumal—**Pandit T. Venkatarama Iyengar** ... 381

III. LIGHT LITERATURE—

1. Chudamani —(a Metrical Drama)—**T. K. Varadachari** ... 385
2. Saraswati—(a Novel)—**V. Muthukumarasami, B.A.** ... 387

IV. LADIES' PAGES—

1. Mothers-in-law on Modern Civilization 396
2. Swayamvaram 398

V. PERIODICAL LITERATURE 404

VI. DEPARTMENTAL NOTES 406

VII. RECENT TAMIL PUBLICATIONS 408

Madras:

"THE MADRAS LITERARY BUREAU,"

10, BROADWAY.

1904.

Thompson & Co., Printers, Madras.

THE

Madras Literary Bureau.

OFFICE:

10, Broadway, Black Town, Madras.

PATRONS:

Diwan Bahadur The Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E., F.M.U.
Diwan Bahadur P. Rajarathna Mudaliar, C.I.E., F.M.U.
T. Vedadrisadasa Mudaliar, Esq.
(*Retired High Court Judge of Travancore.*)

Honorary Corresponding Members.

T. Ramakrishna Pillai, Esq., B.A., F.M.U., F.R.H.S.
G. Subramania Iyer, Esq., B.A.
J. M. Velu Pillai, Esq., F.M.U.
V. Kanakasabhai Pillai, Esq., B.A., B.L.
T. Balasundara Mudaliar, Esq.

SECRETARY:

K. C. Duraisami, Esq.

REPRESENTATIVES:

Throughout Tamil Districts.

ORGAN:

The 'Jnana Bodhini' (ஞானபோதினி),
(A Tamil Monthly Magazine and Review, mainly devoted to Literature, Science, Philosophy and Religion).

MEMBERS.

Two classes of Members are taken in.
Annual Subscription for First Class Members Rs. 10.
Do do Second Class Members Rs. 2.

To the Members of the first class the organ of the Bureau, *i.e., Jnana Bodhini* as well as all the other publications will be supplied free.

To the second class Members the journal will be supplied at the reduced rate of Re. 1-8-0 per year and the other publications at 33 p. c. less than the original price.

Only 500 Members.

I.e., 200 First Class Members and 300 Second Class Members will be admitted. For particulars, and Application Forms apply to the Secretary.

The '*Madras Literary Bureau*' has the following separate Departments:

1. Printing and Editing.
2. Translation.
3. Newspaper.
4. Contribution.
5. Copying, and
6. General Agency.

The '**Bureau**' Edits and Prints Books, &c., for authors and publishers, passes proofs through the press.

The '**Bureau**' purchases Tamil MSS. of Romance, Novels, Fairy Tales and Detective Stories for publication.

The '**Bureau**' undertakes to translate all kinds of work into Tamil.

The '**Bureau**' is quite prepared to take Sale and Sole Agency of Books.

ஞானபோதினி.

"மதராஸ் லிட்டரரி பூரோ" விலிருந்து வெளியாகும்

ஓர் சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சம்புடம். VII. | 1904-ம் ௵ நவம்பர்௴-டிசம்பர்௴ | சஞ்சிகை 11, 12.

Jnana Bodhini.

Annual Subscription, Rs. 2—8—0, Strictly payable in Advance. (Post free).

Advt. Charges: Full page Rs. 10. Half page Rs. 6. Contract Rates on application. Apply to the Secretary, Madras Literary Bureau, 10, Broadway, Madras.

வருஷச்சந்தா ரூ 2—8—0 (முன் பணம்)

விளம்பரம் விகிதம், முழுப் பக்கத்திற்கு ரூ. 10. அரைப்பக்கத்திற்கு ரூ. 6. ஒப்பந்த விகிதம் எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

எல்லாவற்றிற்கும் எழுதும் விலாசம் மதராஸ் லிட்டரரி பூரோ செக்ரடரி, சென்னபட்டணம்.

உள்ளுறைகள் :—

1. மதராஸ் லிட்டரரிபூரோ.— பத்திராசிரியர்.— 361

II. விசேடநிருபங்கள்:—

1. ஜீவசுபாவதத்துவவிளக்கம் II.
—V. N. ஐயங்கார், M.A. ...366

2. வளையாபதி—
—M. V. மீனாக்ஷிசுந்திரமுதலியார், B. A. ...369.

3. உலகயாத்திரை—சர்வஜன சகோதரி. ...371

4. தென்னிந்தியாவிலே செய்யப்பெற்றநவீன சிலாசாசன ஆராய்ச்சி. } சுதேசமித்திரன் ...377

5. விவசாயக்கல்வி—சர்வஜனமித்திரன் ...380

6. திருமாலின் பன்னிருநாமப்பொருள்விளக்கம்
—பண்டிதர். தி. வெங்கடராம ஐயங்கார் ...381

7. சூடாமணி நாடகம்—V. K. அரங்காச்சாரியர். 385

8. ஸரஸ்வதி (நவீனகதை)
—வி. முத்துக்குமாரசாமி, பி. எ. ...387.

III. மாதர்க்கிதமான பக்கங்கள்:—

1. மாமிகளும் தற்கால நாகரீகமும். ...396.

2. சுயம்வரம் ...

IV. நவீனபத்திரிகா வித்தாரமஞ்சரி.— ...404.

V. பலதுறைக் கலாவிசேடக் குறிப்புக்கள். 406.

VI. நூதன தமிழ்ப் பிரசுரங்கள்:— 408.

சென்னை:

தாம்ஸன் கம்பெனியிற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

ஞானபோதினி.

"மதராஸ் லிட்டரரி பூரோ" விலிருந்து வெளிப்படும்.

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VII. | 1904-ம் ஸு நவம்பர்மீ டிசம்பர்மீ | சஞ்சிகை 11,12.

பலதுறைக்கலாபி விருத்தி ஸ்தாபனமாகிய

"மதராஸ் லிடரரி பூரோ"

இதன் சென்ற ஆறுமாதத்திய நடவடிக்கைகளைச் சுருக்கி இதன் காரியதரிசி எழுதுவதாவது:—

இது சென்ற மேமீ சென்னையிலே ஸ்தாபிக்கப்பட்டது. தமிழர்மீதும், இன்னோர்பாஷைமீதும், இதன் கிரந்தங்கள்மீதும் ஆர்வம் பூண்டுள்ளோர் எவரும் ஒருங்குகூடி அவையிற்றிற்குவேண்டும் நன்மைகள் பலசெய்தற்கும், புத்தகம், பத்திரிகைகளைக் குறித்தகாலத்தில் பிரசுரிப்பதற்குமாக இது நவீனமாக ஸ்தாபிக்கப் பெற்றது. அவ்வெண்ணங் கைகூடிவருவதற்காக ஆறு இலாகாக்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் பிற்குறித்த நான்கு மட்டுமே சென்றகெடுவில் வேலைசெய்தனவாகும். அவையாவன:

(1) அச்சியற்றிப் பிரசுரப்படுத்துமிலாகா; (2) மொழிபெயர்ப்பிலாகா; (3) பத்திரிகையிலாகா; (4) புத்தக விற்பனை இலாகா.

"விவசாயம்," "சாஸ்திரி" எனப்பெயர் பூண்ட இரண்டு நூதனமாதாந்தப் பத்திரிகைகளை வெளிப்படுத்துவதாக முன்னறிக்கைப்பத்திரத்திற் கண்டபடி வெளிப்படுத்தவில்லை. சென்ற எழு வருடகாலமாக நடைபெற்றுலவும் ஞானபோதினிப் பத்திரிகை அதன் ஆசிரியர் ம-ள-ள-ஸ்ரீ M. S. பூர்ணலிங்கம்பிள்ளையவர்களால் (B. A.) கொடுக்கப்பெற்று நடத்தப்படுகின்றது. இதுபத்திரிகை ஆங்கிலேயபாணியில் எழுத்துப்பெற்றும்நடத்தப்பெற்றும் வருவதால் அநேகர் புதிது புதிதாய் ஏற்று வருகிறார்கள். அதற்குச் சென்றகெடுவில் பற்பல கல்விமான்கள் விஷயதானஞ் செய்துளர். அன்னோராவார்:—

1. ஸ்ரீமத் வி. கனகசபை பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
2. ,, திருமணம் செல்வகேசவராய முதலியார் அவர்கள், எம். ஏ.
3. ,, எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள், எம். ஏ., எல். டி.
4. ,, நரசிம்ம ஐயங்கார் அவர்கள், எம். ஏ.
5. ,, பண்டிதர் தி. ஷண்முகம் பிள்ளையவர்கள்
6. ,, விச்சூர் முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள், பி. ஏ.
7. ,, K. S. வரதாச்சாரியார், பி. ஏ.
8. ,, T. A. இராமலிங்கம் அவர்கள், பி. ஏ.
9. ,, எம். வி. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள், பி. ஏ.
10. ,, பண்டிதர் வேங்கடராம ஐயங்காரவர்கள்
11. ,, V. K. அரங்கா சாரியர்.

இன்னோர்க்கெல்லாம் வந்தனமதிகமுண்டு. அடுத்தாப்போல் பூரோவின்காரியதரிசி திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் பிரயாணஞ்செய்தபோது ஞானபோதினிக்கு விஷயதானஞ் செய்வதாயும், இன்னும்பல உதவிசெய்வதாயும் வாக்களித்துள்ள கனவான்கள் பிற்குறித்தோராவார்கள்.—

1. திவான் பஹதூர் R. இரகுநாதராயர் அவர்கள், எப். எம். யூ.
2. ஸ்ரீமத் S. இராதாகிருஷ்ணையர் அவர்கள், பி. ஏ.
3. ,, T. தேசிகாச்சாரியார் அவர்கள், பி. ஏ., பி. எல். (இவர் தென்னிந்தியா நாணயங்களைக் குறித்து எழுதுவார்.)

4. ஸ்ரீமத் P. நாராயண ஐயர் அவர்கள், பி. எ., பி. எல். (சாஸ்திர நுட்பங்களையும் பிறவற்றையும் குறித்தெழுவார்.)

5. ,, N. V. A. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், பி. எ., பி. எல். (மூற் காலங்களிலே தமிழ்ப்பாஷை எவ்வாறு போதிக்கப்பட்ட தென்பதையும் அதன் பாட பேதங்களைக்குறித்தும் எழுதுவார்.)

6. ,, பண்டிதர் சவரிராயன் அவர்கள் (தமிழ்ப் பாஷையைக்குறித்து எழுதுவார்.)

7. ,, S. நாராயணசாமி ஐயர், பி. எ., பி. எல். (இவர் ஷேக்ஸ் பியர் காவிய அதிநுட்பங்களை விஸ்தரித்து எழுதுவார்).

சென்றகெடுவிற் பூரோவிலிருந்து வெளிப்பட்ட மூன்றுபுத்தகங்களாவன: சத்தியவிஜயம், என்னும் அரிச்சந்திரன் கதை, இரசாயன சாஸ்திரம், தமிழ்ப்பாவலர் தமிழ்க்கிரந்தங்களின் . வரலாறு, என்பன· இவை யிற்றுள் முந்திய இரண்டும் தமிழ்ப்புத்தகங்கள்; பிந்தியது இங்கிலீஷ்ப் புத்தகம். இவையிற்றைப் பத்திரிகைகளும் பகிரங்கஜனக்கூட்டத்தவர்களும் ஏற்றுக்கௌரவப்படுத்தியது பூரோவுக்குமட்டுமல்ல. நாட்டிற்கே கௌரதை.

பிற்குறித்த புத்தகங்கள் அச்சிலிருக்கின்றன:-லலிதா ஸஹஸ்ர நாமம் (பாஸ்கரராயர் பாஷியமொழி பெயர்ப்போடு), (2) தென்னாட்டுச் சிரேட்டர்கள் [இரண்டாம்பாகம்] (3) நல்லதங்கைகதை; (4) பௌதீகசாஸ்திரம்.

கையெழுத்துப்பிரதியில் அச்சிலேறத்தயாராயிருந்துவரும் புத்தகங்களாவன:—

இராமாயண வீரர்கள் (2) பாரதவீரர்கள்; (3) பேக்கனார் சிற்றுறை; (4) வாழ்க்கைப்பையன்; (5) ஜலாற்புத சாத்திரம்; (6) யந்தரசாஸ்திரம்; (7) சரஸ்வதி (ஒருகதை); (8) குலசேகரி (நாடகம்) (9) உசிதசூடாமணி; (10) அரிச்சந்திரபுராணச் சுருக்கம்.

தயாரிக்கப்பெறும் புத்தகங்களாவன:—பாலசூர சரித்திரம் (2) தமிழ்க் கலா விநோதன்; (3) கம்பராமாயண வருணனைப்பாக்கள்; (4) தமிழ்ப் பேரகராதி; (5) தமிழ்ப்பாவலர், தமிழ்க்கிரந்தங்களின் வரலாறு; (6) வித்தாரகவிகள்; (7) பதினெண் கீழ்க்கணக்கு (ஒரே புத்தகம்); (8) தமிழ் விவசாய வாசகபாட புத்தகங்கள் 1, 2, 3. (9) அனிவசந்தையம்மாளின் பிரசங்கங்களான "அவதாரம்;" "இந்தியாவின்நான்குபெருமதங்கள்" என்பன.

தத்தமது புத்தகங்களையும், பிறவற்றையும் பூரோவிலிருந்து பிரசுரிக்கும்படியாகக் கையெழுத்துப் பிரதிகளாகவும் அச்சுப்பிரதிகளாகவும் உதவியுள்ள கனவான்களாவோர்:—

1. ஸ்ரீமத், விச்சூர். முத்துக்குமாரசாமி பி.எ. (ஸரஸ்வதி. ஒரு அற்புத கதை.)
2. ,, V. கனகசபை பிள்ளை பி. எ. பி. எல். (தமிழ்ச் சரித்திரப்பாக்கள். இது ஆங்கிலத்தில் உள்ளது.)
3. ,, T. A. சுவாமிநாத ஐயர் (முனீஷா பஞ்சகம்-உபநிஷதம்).
4. ,, ஸ்ரீனிவாசர்சாரியார் (புராணகதாசாரம்.)

பூரோவின் பெருநோக்கத்தை எடுத்தோதி அங்கங்குள்ள மடாதிபதிகள், இராஜாக்கள், ஜமீன்தார்கள், கனதன கல்விமான்களின் பேருதவியைநாடி இதன் காரியதரிசி செப்டம்பர்மீ 3உ முதல் நவம்பர்மீ 10உவரை முன் குறிப்பிட்டநான்கு ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்ததோடு புதுக்கோட்டையாகும் அழகிய நகர்க்கும் போயிருந்தார். அப்போது பூரோவுக்கு உதவிசெய்தோரும் செய்வதாக உறுதி மொழிந்தோருமாவார்:—

1. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகசுவாமி பண்டாரமகா சந்நிதிகள் திருவாடுதுரையாதீனம்.
2. மேன்மை தங்கிய மார்த்தாண்ட பைரவதொண்டைமான் பஹதூர் புதுக்கோட்டை மகாராஜா அவர்கள்.
3. எட்டையாபுரராஜா அவர்கள்.
4. ஸ்ரீமத். பொ. பாண்டித் துரைத்தேரவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர்,
5. ஸ்ரீ டி. சிவசுப்பிரமணிய தேவர் தீர்த்தபதியவர்கள். சிங்கம்பட்டி ஜமீன்தார்.
6. ஸ்ரீமத். V. இராமபத்திர நாயுடுகாரு வடகரை ஜமீன்தார்.
7. கனம். எம். தினகர சேதுபதி பஹதூர்.
8. ஸ்ரீமத். K. S. ஸ்ரீனிவாசம் பிள்ளையவர்கள்.

இன்னோர் தமிழ்மீது எடுத்துள்ள அக்கரையை இன்னதென்று இங்கு எழுதுதல் சாத்தியமன்று. இன்னும்பலவாறு காரியதரிசிக்கு உதவிபுரிந்தோராவார்:—

திருநெல்வேலி:—ஸ்ரீமத்கள்—A. சுந்தரசாஸ்திரி பி. ஏ. பி. எல்., N. V. A சோமசுந்திரப்பிள்ளை பி. ஏ. பி. எல், K. S. இராமசந்திரஐயர்(சாத்தூர் சப் மேஜஸ்திரேட்), S. நாராயணசாமி ஐயர் பி. ஏ. பி. எல்., S. A. சோமசுந்தரம் பிள்ளை (எடிடர்-சாத்தூர்).

மதுரை:—கௌரவம் பிஷர்துரை துரைசானி, கனம் ஜி. ஸ்ரீனிவாசராவ் பி ஏ., ஸ்ரீமத்கள் T. இராமகிருஷ்ண ஐயர் பி. ஏ. பி. எல். (டிஸ்திரிக்ட் முன்சீப்), M. நாகலிங்கம் பிள்ளை, P. R. வெங்கடேசலு நாயுடு, L. A. வெங்குசாமி ஐயர் (திண்டுக்கல்).

திருச்சினுப்பள்ளி:—ஸ்ரீமத்கள்—S. T. இரங்கசாமி ஐயர் பி. ஏ. பி. எல், T. தேசிகாச்சாரி பி. ஏ, பி. எல்., கனம் K. வாசுதேவ ஐயங்கார், ராவ் பஹதூர் T. பட்டாபிராம பிள்ளை.

தஞ்சாவூர்:—இராவ் பஹதூர் M. ஆறுமுகம்பிள்ளை பி. ஏ.

புதுக்கோட்டை.—ஸ்ரீமத் விஜயரகுநாத துரை ராஜா பி. ஏ, திவான் பஹதூர் S. வெங்கடராமதாஸ் நாயுடு பி. ஏ. பி. எல் இன்னோர்முறையே மகாராஜா அவர்களின் ஆலோசனைக்கருத்தரும் திவானுமானவர்கள்; ஸ்ரீமத் C. இராஜகோபால் பிள்ளை பி. ஏ. பி. எல். (சீப் ஜட்ஜி)

சூளும்பேட்டை ஜமீன்தார் கனம் முத்துக்குமாரசாமி முதலியார் (B.A.) அவர்கள் சாஸ்திரநூல்களை வெளிப்படுத்துவதற்காக ரூ 100 உதவிசெய்தார்கள். இதுபோலவே மற்றவர்களும் உதவிபுரிந்தால் பற்பல ஆங்கிலசாஸ்திர நுட்பங்களை வெளியிட்டுக்குடிகளுக்கு எண்ணிறந்த நன்மைகளைச்செய்யலாம் என்பது உறுதி. இராஜாசர் இராமசாமி முதலியார் அவர்கள்(Kt. C. I. E) பூரோவிற்கு முதல் முதலிற்கொடுத்த நன்கொடைக்கு மிகவும் பெருமைபாராட்டப்படுகிறார்கள். பூரோநிலைபெறுதற்கு வேண்டிய ஏற்பாடு அன்னோராலும் எதிர்பார்க்கப்படுகிறது. இவரது உதாரதத்துவமும் தேகாபிமானமும் எங்கும் பரவியவே. "இந்து" பத்திரிகையின் அதிபர் ம-ா-ா-ஸ்ரீ M. வீரராகவாச்சாரியார்(BA. F. M. U.) பூரோவிற்குச் செய்தநன்மைகள்பல. அவற்றிற்காக அவருக்கு அநேகவந்தனம்.

பற்பலர் கேட்டுக்கொண்டவண்ணம் இருதிறத்து அவயவிகளைப் பூரோவிற்குச் சேர்ப்பதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

முதல்வகுப்பாளர் வருடமொன்றுக்கு ரூ 10 கொடுப்பார்கள். இவர்களுக்கு ஞானபோதினியும் அந்தந்த வருஷத்திற் பிரசுரமாகும் சகலபுத்தகங்களும் விலையின்றிக் கொடுக்கப்படும். இரண்டாவது வகுப்பாளர் ரூ 2 வருஷமொன்றுக்குக் கொடுப்பார்கள் அவர்களுக்கு ஞான போதினியை வருஷசந்தா ரூ 1—8—0க்கும் இதரபுத்தகங்கள் பிரசுரமாகுமவற்றைவிதித்துள்ள விலைக்கு 100க்கு $33\frac{1}{3}$ தள்ளுபடிசெய்தும் கொடுக்கப்படும். இவ்விரண்டு வகுப்பினர்களைக்கொண்டு வேலைவிமரிசையோடு நடைபெறுமென்றெண்ணப்படுகின்றது.

இவற்றைப் பூர்த்திசெய்விக்க நாட்டில் கனதனம் படைத்துள்ளவர்கள் முன்வந்து உதவுவார்களாக.

NATURAL HISTORY. II.
ஜீவசுபாவ தத்துவ விளக்கம்.
பூச்சிக்குழாம். 2.

(முன்தொடர்ச்சி.)

எறும்பின் சம்பாஷணை:—

நம்மைப்போற் பேசுந் திறத்தவல்லவாயினும் எறும்புகள் ஒன்றோடொன்று சம்பாஷிக்கின்றன வென்பது நிச்சயமே. இவை உரையாடும் பாஷை எத்தகைத்து என்பதைப்பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் பலவிதமாய்ச் சாஸ்திரிகள் வெளியிட்டிருக்கின்றனர். அவையிற்றையெல்லாம் ஈங்கு பணிப்பது வேண்டாதகாரியம். வேறோரிடத்துத்தீனி அகப்படினும் சமீபத்தில் யாது காரணத்தினலோ மற்றோர் கூட்டத்தார் வந்து இறங்கினும் இஃதறிந்த ஊழியக்காரரிரண்டொருவர் கூட்டிலுள்ள மற்றையவருக்கு ஒரு விஞடியிற் சமாசாரமெட்டும்படிசெய்ய அவர்களும் அச்சமயத்திற் கேற்ற கருமங்கொள்வர்.

எறும்பின் நேசம்:—

எறும்புகள் ஒன்றோடொன்று நேசம் பாராட்டுவது மிகவும் வியக்கத்தக்கது. ஒன்று தன்னாற்றூங்கமுடியாத பாரந்தூக்கிவரின் அதைக்கண்ட மற்றொன்று அதற்குதவிபுரியும். சில நாளாய்க்காணாமற்போன உறவினன்

திரும்பிவரின், அவனுக் கன்புகாட்டியழைத்துப்போம். நாலுமாதகாலம் பிரிந்திருந்தபோதிலும் ஒன்றை யொன்று யறியுஞ் சக்தி இவற்றினிட முண்டு. தம்முறவினரிடத்து நேசம் பாராட்டுவது போலவே தம்மெதிரி யிடத்துங் கோபங் கொள்ளும். கோபாவேசத்தால் பீடிக்கப்பட்ட எறும்பு கள் தத்தம் பற்களால் கடித்தும், விஷத்தாற் கொட்டியும், இன்னின தொந் திரவு பல செய்துஞ் சீற்றத்தை மாற்றிக்கொள்ளும்.

எறும்புகளுடைய பசுக்கள்:—

எறும்புகள் பசுக்களை வைத்துப் பரிபாலிப்பவை. இப்பசுக்கள் மற்றொ ருவிதப் பூச்சியாம். (Aphis) இவற்றினின்று மினியதேனுண்டாகும். வேண் டிய சமயங்களில் எறும்புகள் தங்கைகளால் தட்டஅப்பூச்சியுங் குறிப்பறி ந்து தன்னிடமுள்ளதேனைக்கொடுக்கும்; எறும்புகளும்குடிக்கும். இதுகாரண ம் பற்றியே இப்பசுக்களை மிக்க சாக்கிறதையுடன் பாதுகாத்து வருவ துமல்லாமல், தாம் போமிடமெல்லாவற்றிற்கும் அவற்றைக் கூடவே யழை த்துப்போம். இவ்வினத்தைப் கைப்பற்றுவதற்காகப் பல சமயங்களில் போரு ண்டாவதுமுண்டு. இதுநமக்குப்புதிய விஷயமன்று. கௌரவர்கள் சகாதேவ னற் பாதுகாக்கப்பட்ட விராடனுடைய மாடுகளை வந்து வளைத்தது முதல்பார தச் சண்டை ஆரம்பித்தது என்பது நமக்கு நன்கு தெரிந்த விஷயமன்றோ.

எறும்புகளின் போர்:—

ஆகார மபகரிப்பதற்காகவும் போர்விளையும். போவர்களிடமிருக்கும் தங் கச்சுரங்கங் கைபற்றுவானன்றோ ஆங்கிலேயரும் சில ஆண்டுகட்குமுன் அதியுக்கிரமாய் மூன்று வருடம் யுத்தஞ் செய்தார்கள். இராம இரா வண யுத்தமும், பாண்டவ கௌரவ யுத்தமும் காவியங்களினின்றும் படிக் கின்றோம்; ருஷியருக்கும் ஜப்பானியருக்கும் நடக்கும் அகோர யுத்தத்தை ப்பற்றித் தந்திமுகாந்தரமாய் அறிகிறோம். இவையிற்றை நேரிற் பார்க்க ப்பாக்கியம் நாம் பெற்றிலோம். பார்த்தாலும் மிக அறுவறுப்பாயிருக்கு மென் பதற்கைய மின்று. ஆனால் எறும்பினத்தார் சண்டை மரங்களடர்ந்த தோப்புகளிற் பயமும் அறுவறுப்பு மின்றி நமது கண்களால் நாமே பார்க்கலாம். இருபுறமும் படை சேர்த்து யுத்தத்திற்கு வீற்குமெறும்பு கள் கணக்கில. இந்நாளையப்போர்வீரர் குண்டு பீரங்கி துப்பாக்கி ஈட்டி முதலிய வாயுதப் பயிற்சியிற் றேர்ந்தவர்கள். ஆனால் எறும்புகளோ வீராயுத பாணிகளாய் மல் யுத்தஞ் செய்யும் வலிமைபொருந்தியவை. கோபாவேசத் தோடு சண்டைநடக்குஞ் சமயத்துப் போர்க்களத்துண்டாகும் சத்தமும் நாற் றமும் நாம் சகிப்போமல்லோம். ஒருபுறமிவ்வாறு போர் நடக்க மற்றொருபு றஞ் சிலர்கைதிகளைக் கைப்பற்றிச் சயபேரிகை முழக்கிக்கொண்டு தங்கூடு போய்ச் சேர்வார்கள். இன்னுமொருபுறம் சிலர் கை, கால், தலை முதலியவை களை இழந்து பிணக்குவியல்களாய்க்கிடப்பார்கள். மற்றொரு பக்கம்யுத்தக ளத்தில் உயிர் நீக்கி வீரசுவர்க்கமடைவனத மறந்து புறங்காட்டியோடுவார் சி

லர். ஈங்குஇங்ஙனம் போர்நடக்க தத்தங்கூடுகளில் எப்போதும்போலவே எந்தெந்தக் கருமம் நடத்தல் வேண்டுமோ அந்தக்கருமங்குறைவின்றி நடந்து வரும். மஞ்சூரியாவில் யுத்தம் நடக்க ருஷியாவில் பள்ளியிற் படிக்கும் பிள்ளைகளும், போர் வீரரும் ராஜாங்கத்தில் ஊழியம் செய்பவரும்தத்தங் காரியத்தை மறந்ததற்கு மாறாக யுத்தத்திலே கருத்தைச்செலுத்துவதுபோலல்லாமல் யுத்தகளமொன்றில் தவிர மற்றையு விடங்களில் எறும்புகள் நடவாதது போலிருக்கும். இவ்வரிய பெரியபாடத்தை ருஷியர் என்று இவ்வாய் பேசாப் பிராணியிடமிருந்து கற்பாரோநாம் அறியோம்.

செவ்வெறும்பு ஜாதியாரில் ஒரு கூட்டத்தார், வியாதியாலும் கிழத்தன்மையாலும் வருந்துமவைகளை அவற்றால் பயனொன்று மில்லாததால், புற்றினின்று வெளியேதுரத்துவார்கள். இது காரணம் பற்றியும் ஒவ்வோர்சமயத்துப் போருண்டாவ துண்டு.

இராஜ உபசாரம்:—

இன்னுமொரு ஜாதி எறும்பு கைதிகள் கவரச் சண்டைக்கேகி வேறோர் கூட்டத்தில் நுழைந்து அதில் பெரியோர்களை நீக்கிச் சிறு குஞ்சுகளைத் தமது புற்றுக்குக்கொண்டு வரும். இவற்றைச் செவ்வனே பாதுகாத்துப்பெரிதானவுடன் அடிமைகளாகவைத்து வேலை வாங்கும். அடிமைப்பட்ட எறும்புகள் தங்கள் விதியைநோவாது மற்றப்புற்றின் ஊழியக்காரர் செய்யும்வேல்களைத்தமது எஜமானர்க்குச் செய்யும். பலதொழிலோடு, எஜமானர்கட்கு அன்னம் வாயிலூட்டவேண்டும். உண்டி ஊட்டப்பட்டாலொழிய இவ்வமெரிக்க தேசத்தெறும்புகள் தீனி தாமாய் உண்ணுவதில்லை. இச்சாதிஎறும்புகளுக்கு எதிரில் ஒரு பாத்திரத்தில் தேனைவார்த்துவைத்தால், அத்தேனைத்தாமே உயிரிழப்பதாயிருந்தாலும் தாமே தொடாவாம். இவற்றிற் கடிமைப்பட்ட எறும்புகள்வந்து எஜமானர்கட்கு அன்னமூட்டவே வேண்டும். பல நூற்றுண்டுகட்கு முன்னந் தேசத்தையாண்ட மகம்மதிய நவாப்புக்களு மித்துணை விமரிசையாக காலங்கழித்திலரென்பது உண்மை. இவ்வுல்லாச மெங்கு கற்றனவோ?

குடியெடுக்குங் காரணம்:—

தாமிருக்குங் கூட்டினளவுக் கதிகமாக எறும்புகளுண்டாய்விடின் சிலர் தொகுதிதொகுதியாகப் புறப்பட்டு வேறிடஞ்சென்று அங்கு புதிதாகக் குடியேறுவார்கள். இவ்வண்ணம் குடியேறப் போம் எறும்புகளை நாம் பல முறையுங் கண்டிருப்போம். வரிசை வரிசையாய் ஒன்றின் பின்னொன்றாய்ப் போவதும், போகும் நேர்மையும், ஒழுங்கு தவறாது போகின்றனவா என்று சில அதிகாரிகள் மேற்பார்வை பார்ப்பதும், பாதை தவறிச்சென்ற சிலரை இவை நேர்வழி நடத்துவதும் நமக்கு மிகுந்த வியப்பைத்தரும்.

(இதன் தொடர்ச்சிக்கு 401-ம் பக்கம் பார்க்க.)

THE ARGUMENT OF VALAYAPATHI.

வளையாபதி.

இது தமிழ்ப் பஞ்சகாவியங்களுள் ஒன்று. இதனை இயற்றினோர் பெயர் தெரியாது. நூல் எட்டுப் பிரதிகளிற் கிட்டுவதும் அரிது. இதன் 20 அல்லது 30-பாடல்கண்மட்டும் அங்கும் இங்கும் வழங்கி வருகின்றன. இது காவியம் எடுத்துக்கூறும் கதையும் இன்னதென்று எவருக்கும் நன்கு விளங்காது. எனினும் வைசிய புராணத்திற் கூறியவாங்கே இங்கெடுத்துத்திரட்டி எழுதுவோமாக. அதாவது:—

காவிரிப்பூம்பட்டினத்தில் தெய்வபக்தி தர்ம சிந்தை முதலிய நற்குணங்களும் செல்வாக்கும் ஒருங்கே பொருந்திப் பட்டணத்தார் புகழ்ச்சிக்குப் பாத்ரனுன வைரவாணிபன் என்னும் வர்த்தகனொருவனிருந்தான். பட்டணத்திலும் அயல் கிராமங்களிலு முள்ளவர்கள் அவனது அளவற்ற திரவியத்தை எண்ணி நவகோடிநாராயணன் என்றே அவ்வைரவாணிபனை யழைப்பார்கள். அவ்வாணிபன் தனது சுயஜாதியில் ஒரு பெண்ணையும் அயல் ஜாதியில் ஒரு பெண்ணையும் ஆக இரண்டுபெண்களை மணம் புரிந்து மனங்களித்து வாழ்ந்து வந்தான். அக்காலையில் வாணிபஜாதியிலுள்ள சில முதியோர்கள் வைரவாணிபன் பிறஜாதிப் பெண்ணை மணம் புரிந்து வாழ்வதைப் பார்த்து மனம் பொருதவர்களாகி அவன் அப்பிறஜாதி மனைவியை உடனே கைவிடாவிட்டால் அவனை ஜாதியினின்றும் விலக்கி விடுதாகப் பயமுறுத்தினர்கள். அவனும் தன்னினத்தாருக்குள் தனக்குண்டான செல்வங்களையும் மதிப்பையும் இழக்க மனமொவ்வாதவனுகித் தன் மற்றை ஜாதி மனைவியை தன்னைவிட்டு விடும்படி திட்டம் செய்தனன். இங்ஙனம் செய்த சின்னாட்குப் பின்னர்தன்னுடைய வியாபார சம்பந்தமாகக் கப்பலேறிக் கடல் மார்க்கமாகப் பிறதேசங்களுக்கு வாணிபன் யாத்திரைபோக நேர்ந்தது.

இவ்வமயத்தில் தன்னுடைய புருடனுல் கைவிடப்பட்டபொழுதே கர்ப்பிணியாயிருந்த அந்தப் பெண்ணானவள் பக்கத்துக் கிராமத்திலிருந்த காளிகோவிலுக்குச் சென்று நமஸ்கரித்து "அம்மையே! ஜெயங்கொண்டவளே! குற்றமற்றவளே! என்றுமிருப்பவளே!" என்றுபலவாறுக விசனத்தோடு விளித்து "என்குறையைக்கேட்டும், எனது ஆதரவற்ற நிலைமையைப் பார்த்தும் மனமிரங்கி எனது கணவன் மறுபடியும் என்னைச் சேர்த்துங்கொள்ளும் படி வரம் அருள்வாயாக," என்று பிரார்த்தித்தனள். இவ்வாறு மனமுருகித் தளர்வுற்றுப் பிரார்த்தித்துக்கொண்டிருந்த அந்தப்பெண்ணுக்கெதிரில் காளிதேவி பிரசன்னமாகி "ஓ சுந்தரம் பொருந்தியமாதே! இனி மனந்தேறுக.

விசனப்படவேண்டாம்; இந்தக்கிராமத்தில் நீ வந்து குடியிருந்த சிலநாட்குப் பிறகு எல்லாம் நன்மையாய் முடியும்; நான் உன்னைச் சந்தோஷப்படும்படி செய்கிறேன்'' என்று சொல்லி மறைந்தது. அவளும் அவ்வாறே அக்கிராமத்தில் குடியேறிநாட்களைக் கழித்து வந்தாள். சில மாதங்கள் கழிந்தன. அவளுக்குச்சௌந்தர்யமுள்ள ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தை தன்தாயின் மனதிற்கும் கண்ணிற்கும் மிக்க சந்தோஷத்தை உண்டுபண்ணியது. தன் குலத்திற்கும் நாட்டிற்கும் பெருமையையும் கீர்த்தியையும் கொண்டு வருமென்றே யாவரும் சொல்லும்படியாக இருந்தன. அக்குழந்தையின் முகக்குறிகள். சில வருடங்கள் சென்றன. குழைந்தையும் வளர்ந்து வாலிபப்பருவத்தை யடைந்தது. இவ் வாலிபன் ஒரு நாள் வேறு சில பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கையில் இவனுக்கும் மற்றொருவனுக்கும் சண்டையுண்டாயிற்று. அந்தச் சண்டையில் இவனைநோக்கிப் ''பெற்றவன் செயலறியாப் பிள்ளையன்றோ நீ'' எனச் சொல்லிப் பரிகாசம் செய்தான். இந்தப் பரிகாசவார்த்தையைக் கேட்டவுடனே இவ்வாலிபன் மிகவும் வெட்கி உடனே தன் தாயினிடம் ஓடிச் சென்று நடந்த சங்கதிகளை அவளிடம் விரித்துக்கூறித் தன்னுடைய தகப்பன் பெயரென்னவென்று கேட்டான். கேட்டவுடன் தாயானவள் மிகுந்த துயரத்தோடும் ''காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள வைரவாணிபன் என்னும் வர்த்தகன்தான் உன் தகப்ப'' னென்று கூறிப் பின் தான் அவனை விட்டு நீங்கவேண்டியதற்கு நேர்ந்த காரணத்தையும் சொன்னாள். இவையெல்லாம் பெறுமையுடன் கேட்டு ஆண் சிங்கம் போன்ற அவ்வாலிபன் தன் தகப்பன் தன் தாய்க்குச் செய்த கொடுமையை யெண்ணிக் கோபாவேசங்கொண்டு காவேரிப்பூம் பட்டணத்திற்குப்போய் கப்பல்யாத்திரையினின்றும் திரும்பிவந்த வைரவாணிபன் உட் சென்று அவனால் நீக்கிவைக்கப்பட்ட மனைவிக்குப் பிறந்த அவனுடைய மகன் என்று தானே நேரில் சொல்லிக்கொண்டு நிற்க, வைரவாணிபன் தான் நீங்கும்பொழுது அவள் கர்ப்பிணியாயிருந்ததைச் சிறிதும் அறியாதவனாதலால் இப்பொழுது வந்த இச்சிறுவன் தன் மனைவியின் குணக்கேட்டால் உதித்த பிள்ளையென்றெண்ணி அவனைப் பார்த்து ''உன் வெட்கங்கெட்ட வார்த்தைகளால் என்னைத் தொந்தரவு செய்யாது போ!'' என்று சொல்லியும், அவ்வாலிபன் அதற்குச் செவிகொடாமல் தான் வைரவாணிபனுடைய மகனென்றே வற்புறுத்திக் கூற, வாணிபன் ஒன்றுந் தோன்றாதவனாய்த் தன்னுடைய இனத்தாரிற் சில முதியோர்களுடன் ஆலோசிக்கலானான். அச்சிறுவனே தான் அவ்வைரவாணிபனுக்கே பிறந்தவன் என்பதற்கு யாவரும் மறுக்கக்கூடாத சாக்ஷியைத் தருவதாகவும் கூறினான். அப்படியானால் ஒருநாளைக்கு எல்லாரும் சேர்ந்து தீர்மானம் செய்வோமென்று அங்கிருந்தவர்கள் சொல்ல அவ்வாலிபனும் அதற்கிசைந்தான். தீர்மானத்துக் குரிய நாள் ஏற்படுத்தப்பட்டது.

உடனே அப்பிள்ளை வீட்டிற்குச் சென்று நடந்த வர்த்தமானமுற்றும் தன் தாயினிடங் கூற அவள் காளிகோவிலுக்குச்சென்று பிரார்த்தித்தாள். உடனே காளிதேவதை தானே சாக்ஷியங் கூறுவதாக வாக்களித்தது. குறிக்கப்பட்டதினத்தில் முதியோரெல்லாம் ஒருங்கு சேர்ந்தனர். அவ்வாலிபனுந் தன் தாயுடன் வந்தான். வைரவாணிபனும்வந்தான். சபையோர் அப்பெண்ணை நோக்கி "உன்னுடைய கற்பை சாக்ஷியத்துடன் மெய்பிக்க வேண்டு"மென்றுசொல்ல,அவள் காளியைத்துதித்தாள். தயாளகுணமுள்ள காளிதேவதை இவர்களெல்லாருடைய முன்னிலையிலும் உடனே தோன்றி "இப்பெண்மணியின் கற்பைப் பற்றிச் சிறிதும் ஐயமுற வேண்டியதில்லை. இப்பிள்ளை வைரவாணிபன்புதல்னென்பதுண்மையே"யென்று உறுதியாய்க் கூறஎல்லோரும்சந்தேகநிவிர்த்தியாகிநம்பினார்கள். வைரவாணிபன் உடனே அப்பிள்ளையைத் தன் மகனெனத் தழுவிக்கொண்டு அவனுடைய பாகமாக அழகாபுரி என்னும் பட்டணத்தையும் மற்றும் பல திரவியங்களையும் அவனுக்குக் கொடுத்து அவனையும் அவன் தாயையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். இக்கதையின் முக்கிய கருத்து மாதர்கட்குக் கற்பினும் மிக்கதொன்றில்லை என்பதே.

எம். வி. மீனாக்ஷிசுந்தரம் பி. ஏ.

A TOUR ROUND THE WORLD.
உலகயாத்திரை.

"பரமாய சக்தியுள் பஞ்சமா பூதமுந்
தரமாறித் தோன்றும் பிறப்பு" என்றபடி

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐவகைப்பூதங்களின் ஸம்யோகத்தினால் தோன்றிக் கிடக்கிறதும், மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படுகிறதுமான இவ்வுலகமானது பூமண்டலம், வாயுமண்டலம், ஜலமண்டலம், சூரியமண்டலம், சந்திரமண்டலம், நட்சத்திரமண்டலம், அக்கினிமண்டலம்—இவைகளைத் தன்னகத்தடக்கியுள்ளதாக விருக்கின்றது. அத்தகைய உலகையாத்திரை செய்கிறதென்பது அதினம்சங்களாகிய மேற்கூறிய மண்டல விஷயங்களை விசாரித்துத் தெளிவதே. மண்டலமென்பது ஒவ்வொன்றின் திரட்சியையே சொல்லப்படுகிறது. தேசயாத்திரை சிலர் தேகசுகத்திற்காகவும், சிலர் பக்திகாரணமாகவும், மற்றுஞ் சிலர் பரோபகாரார்த்தமாகவும் செய்கின்றனர். ஆனாலிவணெடுத்துக் கூறவந்த உலகயாத்திரை, ஒவ்வொருவரும் தாமிருக்குமிடத்திலேயே தேகசுகத்தையும் மனரம்யத்தையு மடையும்

படி அந்தக்கரணத்திருத்தத்திற்கென்றே செய்வது. மேல் வரைந்துள்ள படி பஞ்சமண்டலங்களைப்பற்றியும் எடுத்துரைக்கும் பெரிய சாஸ்திரங்களை எல்லாம் நாம் வாசிக்கவேண்டியது அவசியமா என்றும், அவ்வாறு வாசிப்பதற்கு நமது ஸம்ஸாரத் தொல்லைகளிடம் தராதேயென்றும், அவ்வித சாஸ்திரங்களை வாசிப்பதால் நம்போன்றவர்க்குறும் பயன்யாதென்றும் பலர் வினு நிகழத்தினும் நிகழ்த்துவர். அவர்கள் வினுவிற்குச் சமாதானங் கூறுவாம்.

ஒவ்வொருவரும் பிறருதவியை நாடுபவராகவும், பிறரபிப்பிராயங்களை அவர்களுடன் சம்பாஷிக்கும் சம்பாஷணையினு லறிந்துகொள்ளு மவாவுடையவராகவுமிருப்பதால் தங்கள் பொழுதுபோக்கைக் கவனியாமலே அன்னியர்களுடன் பேசுவது அவசியமானதென்று புலப்பட்டு அவ்வாறுபேசுவது சகஜமாகவிருப்பதுபோலவே இச்சாஸ்திரங்களையும் வாசித்தறியவேண்டியதவசியமே. அன்னியபாஷை பயிலாத சில முக்கிய காரணங்களால் கடுமையானநடையிலுள்ள பெருங்காவியம்போன்றவைகளை வாசிக்கக்கூடாவிடினும், பரோபகாரசிந்தையுடைய ஸாஸ்திரநிபுணச்சகோதரர்கள் எளியநடையில் "சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல்" என்னு மிலக்ஷணமாய்ச் செய்திருக்குஞ் சாஸ்திரச் சுருக்கங்களை வாசித்தறிவது எளிதே. 2. ஸம்ஸாரத் தொல்லைகளென்பது அவ்வளவாக எடுத்துக்கொள்ளக்கூடிய நியாயமல்ல; ஏனெனில் நமதுசகோதரிகள் உதவியின்றித் தாங்களேவீட்டுக்காரியங்களனைத்தினையும் பார்ப்பவர்களாகவிருப்பினும் மத்தியானவேளையில் உண்டு இளைப்பாறியபின் சகிகளுடன்கூடி வார்த்தையாடுங்காலமானது இவர்களுக்குச் சொந்தமாகவிருக்கின்றதே.

> "இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
> ஒழுக்க முடையார் வாய்ச்சொல்"

என்பதற் கியைய இச்சம்ஸாரஸாகரத்தைக் கடக்க ஊன்றுகோலாயுதவும் மூன்னோரனுபவவுரைகளாம் சாஸ்திரங்களை வாசிக்கவேண்டியது அவசியமென்னுங் கருத்துடையார் கூறியவாறு காலமில்லையென்பது வெற்றனுரையாகும். 3. அத்தகைய ஸாஸ்திரங்களை வாசிப்பதால் பயன் யாதெனில் அவை யளவிறந்தன. அவற்றை முறையே ஒவ்வொன்ருக நமது **ஞானபோதினி** பத்திரிகைவாயிலால் வெளியிடுவதைச் சகோதரிகள் கண்டுணரலாகும்.

முதலாவது:—பூமண்டலத்தைப்பற்றிச் சுருக்கமாகக்கூறுவோம். அதாவது பூமண்டலமென்பது பெரிதும், சிறிதும், உயர்ந்த மேடுகளும் உடைய அனேக நிலப்பிரிவுகளைத் தன்னுளடக்கியதாயும் கண்டம், தேசம், பட்டணம், பரியாயத்தீவு, தீவு, மலை, பள்ளத்தாக்கு, முனை, பூசந்திஎன்னும் பலநாமங்களைப் பூகோள சாஸ்திரிகளா லிடப்பெற்றதாயுமிருக்கின்றது.

அவ்வாறு பிரிவுபட்டிருக்கும் தேசங்கள் முதலான பூமண்டலாம்ஸங்களில், சீதளோஷ்ணத்திற் கேற்கனவே விளைபொருள்களும், அவற்றையுண்ணும் மனுகுலத்தினர்க்குப் புத்தி யுக்தியும், நடை உடை பாவனைகளும் அமைந் திருக்கின்றன. எனினும், சிலதேசாசாரங்கள் சிலதேசத்தினர்கள் அனுஷ் டிப்பதற்குப் பொதுவானதாய்க் கனத்தையும், சீர்திருத்தத்தையும், செல் வத்தையும், சுகத்தையும் தரத்தக்கினதாகவிருக்கின்றன. ஆதலின் அத்தகைய ஆசாரங்களைப்பற்றி நன்குவிசாரித்துத் தெளிந்து அனுஷ்டிப்பதுடன் தத்தம் சகிகளையும் அனுஷ்டிக்கும்படி முயற்சி செய்வது சிறந்ததன்மையுமாகும். தே சுத்தினல் தேசயாத்திரைசெய்து தெளிந்துகொள்வதென்பது கூடாது. ஏனெனில் உலகில் உள்ள மானுடவர்க்கங்களின் வாணாள் என்னும் ஆயுள் மிக அற்பமாக விருப்பது முதற்காரணம். பிரயாணிப்பதற்குப் பெருந் துணையாகவிருக்கும் செல்வப்பொருள் சிலருக்குக் குறைவாகவிருப்பது 2. வது காரணம்; சமுசாரமுதலிய பலவிதசங்கடங்களால் தடைப்படுவது 3. வது காரணம். ஆயினமையின், வளவர், வறிஞர் இருபான்மையர்க்கு மே பயன்படும்பொருட்டுச் செய்துள்ள பூகோளசாஸ்திரம், பலதேச சரித் திரங்கள் இவைகளுடன் அப்போதைக்கப்போது நிகழும் ஆச்சர்யமும், ஆனந்தமுமான விஷயங்களைக்கொண்டு அருமையாம் உயிர்களுக்கு இன்னல் விளையாவண்ணம் கண்ணிமைபோலக்காக்குந் தன்மையுடைய கண்கண்ட தெய்வமாகவிருக்கும் அரசர்களின் சட்டங்களடங்கியுள்ள விசாரணைத் தீர்ப்பு இவைகளைப்பற்றிப் பேசிக்கலாபிமானிகளின் விலையிலா இதயப் பிர காச நவமணிகளைத் தத்தம்மகத்தடக்கியிருக்கும் வர்த்தமானப் பத்திரிகைகளை யும் வாசித்து விஷயங்களைத் தெரிந்து தங்கள்சுகத்திற்கும்,கௌரவத்திற்கும், திருத்தமடைவதற்கும் எவையுக்தமும், அனுஷ்டிப்பதற் கெளியனவாகவு மிருக்கின்றனவோ அவைகளை, அன்னமானது நீரைப்பிரித்துப்பாலை யருந்து வதுபோலக் கிரஹித்துத் தாங்களனுஷ்டிக்க முயல்வதையே உலகயாத் திரை என்று உணரற்பாலர். இஃதன்றியும் பலதேசங்களினின்றும் நந்தே யத்தில் வந்திருக்கும் பலவித ஜாதியார்களுடனும், பலவித சமயத்தினர் களுடனும் நந்தேசத்துள்ள பலவித சாதியினர் சமயத்தினர்களுடனும் பேதமின்றிச் சங்கங்கூடி ஒற்றுமையுடனும் சகோதரவாஞ்சையுடனும் கலந்து பேசி நட்புக்கொண்டாடிஅவர்கள் ஆசாரானுஷ்டானங்களைப்பற்றியும்அவைக ளுண்டாயிருப்பதின் காரணம் அவற்றின்பலன் இவைகளைப்பற்றியும் விசா ரித்துவருவது எவ்வளவோ அரிய விஷயங்களை எல்லாமெளிதிலுணர்வ தற்கு ஏதுவாகும். பூமி தட்டையாயிருக்கின்றதென்றும், அதைப் பூமிதேவி, ஆதிசேஷன் இவர்கள் தாங்கியிருக்கிறார்களென்றும், அவர்கள் ஒரு தோளி னின்றுமற்றொருதோளிற்கு இப்பூமியை மாற்றுவதினலே பூமியதிர்ச்சி உண் டாகிறதென்றும், பூமியைச்சுற்றி சூரிய சந்திராள் வருகின்றனரென்றும், பூமியைச்சுற்றி அவ்விருவர்கள் வரும்போது ஒருவரையொருவர் சந்திக்குங்

காலத்தையே அமாவாசையென்று கொள்வதுமாக விருக்கும் ஆபாஸஞானக் கொள்களை நமது பூகோள சாஸ்திரமுங்ககோள சாஸ்திரமும் அகலச்செய்து நமது மக்களுக்கும் மற்றுமுள்ள நமது புராதன கொள்கைகளைப் பிடிவாதமாகப் பேசிவருபவர்களுக்கும் நன்மைபயக்குமென்பதுறுதி.

வாயுமண்டலமென்பது பூமண்டலத்திற் கன்னிதையாக வுள்ளதன்று. ஜலமண்டலமு மவ்வாறே யிருக்கின்றது. இவைகள் பூமண்டலத்திற்குமேலும் கீழும் உள்ளும் புறம்புமாகவிருக்கின்றன. வாயுவானது கண்ணிற்குப் புலப்படாத வஸ்துவாகவிருக்கினும் பரிசவுணர்ச்சிக்குப் புலப்படும் படியானதாகவிருக்கின்றது. மேலும் தனித்தவஸ்துவுமன்று. அதுகுளிர்ந்து வீசுவதால் ஒருவிதகுணமும்,அனல்கொண்டு வீசுவதால் மற்றொருவித குணமும் கொடுக்கக்கூடியது. பிராணவாயு,விர்க்குணவாயு என்னுமிருவகைவாயுக்கள் கலந்திருக்கின்றன. அவ்வாறுகலந்திருக்கும் வாயு சீதோஷ்ணபேதத்தினு லுண்டாவதுதான் காற்று. குளிர்ந்து வீசுங் காற்று தடித்தும், அனல்கொண்டு வீசுங்காற்றுலேசாகவு மிருக்கும். இவைகளின் குணங்கள் மிகவியக்கத்தக்கவைகளாக விருக்கும். இக்குளிர் காற்று சூரியன் மறைந்து வெப்பங்குறைந்த பிறகுண்டாகிறது. அதுதேகத்திற் படுவதாற் பலவித அசுகங்களுண்டாகின்றன. அது மூளையைக்கெடுத்து இரவில் கெட்டகனவுகளைக் காணச்செய்கிறதுமன்றி, தேகத்தை அசைக்கவொட்டாமலும்,கண்ணைவிழிக்கவொட்டாமலும் தேகசக்தியைக் குறையச்செய்கின்றது. இதைப்பேய்ச்செய்கையென்று நம்மூதாதைகளும் அவர் வழிச்செல்லும் தற்கால விர்விசாரணிகளும் கூறுவர். இது சுத்தத்தவறு. இரவில், 8 மணிக்குமேற்பட்டுவெளியிற் சென்று, உலாவிவருபவர்களுக்கும், வீடுகளில் மிககாற்றுலாவும்படியான இடங்களில் படுத்துறங்குப்வோர்களுக்கும் இதனுண்மை நன்குவிளங்கும். வாயுவின் பேதத்தினு லுண்டாகும் பலவித ஆச்சர்யகரமான விஷயங்களை அறிந்து கொள்வதின் பயன் மூட அபிப்பிராயங்களை எல்லாம் நீக்குவதாகும். வாயுவானது ஜலத்திற்கும், அக்கினிக்கும், ஆதாரமாயுள்ளது. பூலோகத்தை இயக்கும்படியானது; அவ்வாறே ஜீவகோடிகளையும் இயக்கும்படியானதாக விருக்கின்றது. மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் காற்றொடுங்கில் சத்துப்போயிற்றென்று எடுத்தெறிகின்றனர். இதுவே திருஷ்டாந்தம். இக்காரணத்தைப்பற்றியே வாயுவை வாயுபகவான் என்றும் அதற்கு மந்திரமுதலிய பூஜை நைவேத்தியங்கள் செய்யவேண்டுமென்றும் நம்மூதாதைகள் உவமையலங்காரஞ் செய்திருக்கின்றனர்.

ஜலமண்டலமானது ஆக்ஜிஜன், நைட்ரஜன் என்னும் இருவகை வாயுக்கூட்டத்தினு லுண்டாயது என்று ரசாயனிகள் கூறுவர். பூமிபலவித விலபேதங்களை யுடையதாக விருப்பதுபோல ஜலமும் பலவித உருவபேதங்களை யுடையதாயும், குணபேதங்களை யுடைதாயுமிருக்கின்றது. இதற்கு

ஆக்கல் அழித்தல்முதலிய சக்திகளிருப்பதால் இதையும், வருணபகவான் என்றும், கங்காதேவி என்றும் கூறுவார்கள். இந்த சலத்தைநாம் சரியாக உபயோகப்படுத்துவதால் தேகசுகங் கெடாமல் சுகவிருத்தியுண்டாம். அக்கினிமண்டலமானது சூரிய, சந்திர மண்டலங்களுக்கருகிலிருக்கின்றதாகவும் அக்கினிமண்டலத்தினுலேயே சூரியனுக்கு ஒளியும் வெப்பமும் உண்டாகிறதென்றும், சூரியனலே சந்திரனுக்கு ஒளிஉண்டாகின்றதென்றும் சாஸ்திரிகள் கூறுகின்றனர். அக்கினிமண்டல மில்லாவிடில் உலகுய்ய இடமிராது. உலகெலாம் ஒளியும் வெப்பமு மின்றி நாசமடையும். நிற்க உலகை உஜ்ஜீவிக்கும்படி செய்வதுபோலவே அதற்குஅழிக்கும்படி செய்யவும் சக்தியுண்டு. அத்தகைய சக்திகளைத் தன்னுள்ளடக்கிச் சாந்தசிலரைப்போ லிருப்பதால் அக்கினிபகவான் என்றும், அதற்கு பூஜை நைவேத்தியங்கள் செய்யவேண்டு மென்றும் முன்னோர்மொழிந்திருக்கின்றனர். உண்மையில் அதுகடவுளல்லாவிடினும் அதனது சக்தியைக்கண்டு நாமும் சாந்தசீலராகவும் வீண்பெருமை யொழிந்தவராகவு மிருப்பதுநலம்.

சூரியமண்டலம், சந்திரமண்டலம் இவைகள் பூமண்டலத்தைப்போன்றவைகளே. பூமி சூரியசந்திரர்களைச் சுற்றுகிறதன்றிச் சூரியசந்திராதிகள் பூமியைச் சுற்றுகிறதில்லை. அவ்வாறு பூமி சூரியனைச்சுற்றி வருவதால் நாளும், வருஷமும் உண்டாகின்றன. பூமி நடுவிலும் சூரியசந்திரர்கள் பூமிக்கிருபக்கத்திலுமிருக்கும்போது பௌர்ணமியும், பூமிக்கு ஒருபக்கத்திலேயே சூரிய சந்திரர்க ளிருக்கும்போது அமாவாசையும் உண்டாகின்றன. சூரியன் மீதும் சந்திரன்மீதும் பூமியின் நிழல்படுவதால் சூரிய சந்திரகிரஹணங்கள் உண்டாகின்றன. இங்ஙனமிருக்க சூரியனைக் கேதுவும் சந்திரனை இராகுவும் விழுங்குவதால் சூரிய கிரஹணம் சந்திரகிரஹண முண்டாகின்றன வென்று கூறுகின்றனர். இது சுத்த மூடக்கொள்கை. ஏனெனில், உலகிற்கு சூரிய சந்திரர் ஒன்றுகவிருக்க, ஒருதேசத்தில் கிரஹண மிருப்பதும் மற்றொரு தேசத்தில் கிரஹணமில்லாதிருப்பதுமாக விருக்கின்றதைநோக்கத் தற்காலத்து சாஸ்திரிகள் கூறுவதே உண்மையெனக் கொள்ளக்கூடியது. ஏனெனில் பூமி நிழல்படுவதால் எதிர்ப்பக்கத்திலிருப்பவர்க்கு கிரஹணந் தோன்றுகின்றது என்பதும், கிரஹணமானது சூரியன்மீது மற்றொருவட்டவடிவானதின் நிழல் படுவதாகவுமிருப்பதால், பூமியின் நிழலே சூரியன் மீது விழுந்து கிரஹணந்தோற்றுகிறதென்று தீர்மானிக்கஹேதுவாம். கிரஹணம் வரும்போது கவனமாய்ப் பார்ப்பவர்க்கு இதனுண்மை விளங்கும். இவ்வாறே சந்திர கிரஹணத்தையும் கொள்க. சூரிய சந்திரர்களை மற்ற கிரஹகங்களுடன் சேர்த்து இவைகளால் தேசங்களுக்கும் ஜீவகோடிகளுக்கும் பலவித சுகதுக்கங்களுண்டாகின்றன வென்றும், இவற்றை தேவர்களென்றும் சொல்லுகின்றனர். அத்தகைய சித்தாந்தங்களையெல்லாம் சோதித்தறிவதற்காகவே வான சாஸ்திரம் வாசிக்கவேண்டும், நட்சத்திரமண்டலங்களும்

நாம் வசிக்கும் பூமியைப்போன்ற உலகங்களே. நமது முன்னோர்கள் கிரஹங்களையெல்லாம் தெய்வீகபுருஷர்கள் என்றும், அவர்கள் நிலைமாறுவதால் உலகத்திற்குச் சுகமும் துக்கமும் நேரிடுகின்றன என்றும், அவ்வாறே மனிதர்களுக்கும் கிரகக்கோள்களால் பலவித கஷ்டநஷ்டங்கள் உண்டாகின்றன என்றும், அக்கிரகங்களைப் பூஜிப்பதால் அவற்ருலுண்டாம் தோஷங்கள் நிவாரணமாகுமென்றும், அக்கிரகங்களின் நாமத்தையே தினங்களின் நாமங்களாக ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனி என வழங்குதல் வேண்டுமென்றும் நியமனஞ்செய்துள்ளபடி தற்காலத்தும் அனுஷ்டித்து வருகின்றனர். இத்தகைய ஆபாஸ சித்தாந்தங்களனைத்தையும் நீக்கி அறிவு விருத்தியடையும் பொருட்டே (Astronomy.) வானசாஸ்திரம் என்னும் கிரந்தத்தை வாசித்தல் வேண்டும். அவ்வாறு சாஸ்திர விசாரணை செய்யாமல் நமது மூதாதைகள் சித்தாந்தத்தையே கைப்பற்றி ஒழுகுவோமாயின், நாம் கெடுவதுமன்றி நமது மக்களையும் நம்மைப்போல் சாஸ்திரவிசாரணை செய்யவொட்டாமலும், அவர்கள் செய்வதாகவிருந்தாலும் அவர்கள் கல்விச்சாலையைவிட்டு நம்மிடம் வந்து நமது ஆசாரங்களைக் கண்டு பழகுவதால் அவர்கள் சாஸ்திரப் பயிற்சி அவலமாகும்படி செய்து "தான் கெடுகிறதுமன்றிச் சந்திர புஷ்கரணியையும் கெடுத்தானும்" என்கிற பழமொழிப்படி நமது விவேகசூன்யத்தினல் கறுத்ததெல்லாம் நீர், வெளுத்ததெல்லாம் பாலென்று நம்பி மோசமடைவதுடன் நம்மக்களையும் மோசமடையச் செய்வதற்கேதுவாம். ஹிஸ்டீரியா (Hysteria-Somnambulism) சொப்பனத்திற் சாக்கிரம் போல மதிமயக்கத்தினல் செய்யும் செய்கை இவைகள் பெண்களுக்கு பெரும்பாலுமுண்டாகின்றன. அவற்றினை பேய்ச்செய்கை என்று கூறுகின்றனர். நமது மூதாக்கள் வார்த்தைகளை அடிக்கடி செவியேற்ற பழக்க முதிர்ச்சியால் நமது சகோதரிகள் பேயாடுகிறது வாஸ்தவமென்று நம்பித் தங்கள் வசப்பட்டுள்ள ஆடவர்களையும் தாங்கள் செய்யும் பேய் பூஜைக்குத் துணை நிற்கச்செய்கின்றனர். இதனல் பலவித கஷ்டநஷ்டங்களுண்டாகின்றன. ஆயுர்வேதமென்னும் வைத்தியசாஸ்திரம், தேகதத்வசாஸ்திரம், இரசாயன சாஸ்திரம் இவைகளைச் சிறிதளவேனும் வாசிப்போமாகில் மேற்கூறிய துர்ச்சுபாவங்களும் அவற்ருல் விளையுங்கேடுகளும் வேரற்றுப்போவதுடன் நமது மக்களுக்கும் பந்து மித்திரர்களுக்கும் தேசத்திற்கும் அளவிறந்த சுகிர்தங்களுண்டாம். இதையே உலகயாத்திரை செய்வதின் பலனெனக்கொள்க.

ஸர்வஜனசகோதரி.

RECENT ARCHÆOLOGICAL RESEARCHES IN SOUTHERN INDIA.

தென் இந்தியாவிலே செய்யப்பெற்ற நவீன சிலாசாசன ஆராய்ச்சி.

அரசாங்கத்தார் குடிகளுக்காகச் செய்யும் நன்மைகள் பலவாகு மன்றே. பலவும் பலதுறைப்பட்டனவாமே. அவற்றுள் சிறந்தவைகளில் ஒன்ருகக் கணிக்கப்படுவது இவ்வாராய்ச்சி. இவ்வாராய்ச்சி இலாகாவின் சென்னை இராஜதானிக்குத் தலைவராகத் தற்போதுள்ளவர் மிஸ்டர் வேங் கய்யா எம். ஏ. இவர் சென்ற வருஷம் ஆராய்ச்சி செய்தவற்றிற்கோர் பத்திரிகை எழுதி வெளிப்படுத்தியுள்ளார். அதனைச் சென்னைக் கவர்ன்மெண் டார் பரிசீலனைசெய்து பகிரங்கமாக்கினுர்கள். அதனுல் வெளியாகும் சில முக்கியாம்சங்கள் பின்வருமாறுகாண்க:—

சென்ற வருஷத்தில் பார்த்தெழுதப்பட்ட சிலாசாதனங்களின் தொகை சற்றுக் குறைய 8000 ஆகிறது. இதுதவிர அநேக செப்புச் சாஸனங்கள் விலைகொடுத்து வாங்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை தஞ்சாவூர் ஜில்லா மன்னுர்குடித் தாலுக்காவில் கிடைத்தவை. இவை 1011 கி. பி. முதல் 1200. கி. பி. வரை அரசாண்டவர்களாகிய ராஜேந்திரசோழன் I., ராஜசேகரிவர்மன், குலோத்துங்க சோழன் III., ராஜராஜன் III. என்னும் நான்கு அரசர்களின் காலத்வதச் சேர்ந்தவை. மேலும், வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள சந்திரகிரி கோட்டையானது சுமார் 1000 கி. பி. யில் இம்முடி நரசிம்மன் என்ற யாதவ அரசனுல் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. 1547-ம் வருஷத்தில் அதில் 74 கேயில்கள் இருந்ததாக வெளியாகின்றது. அவை பிற்காலத்தில் மகமதியர்களால் தகர்க்கப்பட்டன போலும். இப்போது அவ்விடத்தில் மண்டபங்கள்போலத் தோன்றுகிற 2-கட்டிடங்களும் சமணக்கோயில்களா யிருந்தனவென்று தெளிவாகின்றது.

திருப்பதிக்கோயில்களைப் பற்றிக் கவனிக்கத்தக்க சில முக்கிய விஷயங்களாவன: திருப்பதிக்கோயில்முதல்பிராகாரத்தில் ஒருஅறையில்காணப்பட்ட 2 வண்டிப்பாரம் செப்புத்தகடுகள் அரசர்களின் ஆக்கினை யெழுத்துக்கள் என்று முந்தி நினைத்துக் கொண்டிருந்த எண்ணம் பிழையென்றும், அவை எல்லாம் தல்லபாகம் வமிசத்தைச்சேர்ந்த ஒருவனுல் எழுதப்பட்ட பாட்டுக்கள் எனவும் விசிதமாகின்றன. முதல் கோபுரத்தின் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் பிரதிமைகள் விஜய நகரத்தரசனுகிய கிருஷ்ண தேவராஜனும் அவனது இடப்பக்கத்தில் சின்னதேவி வலப்பக்கத்தில் திருமலைதேவி

யென்ற இரண்டு பத்தினிகளு மென்று நிச்சயிக்கப்படுகின்றன. அநேக சாஸனங்களில் இந்த இரண்டு ராணிகளையும் பல தர்மங்கள் செய்தவர்களென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றார்கள். திருப்பதியின்கீழ்ப்பாகமாகிய திருச்சானூர் சோழர் காலத்தில் இளங்கோயில் என்று வழங்கிவந்ததாகவும், அதாவது சுப்பிரமணியர் கோயில் என்று பொருள்படுவதாகவும், ஒரு காலத்தில் திருப்பதி சிவஸ்தலமாயிருந்த தென்போருடைய கொள்கைக்கு இது ஒரு பலமாகுமென்றும் சொல்கிறார்.

திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தசாரதி கோயில்கர்ப்பக்கிரகவாயிலில் தரையில் பதிக்கப்பட்ட ஒருகல்லில் ஓர் பல்லவ சாஸனம் வெட்டப்பட்டிருக்கிறது. தந்திவர்ம மகாராஜாவின் அரசாட்சியின் 12-ம் ஆண்டில் அது பதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்தக்கோயில் வயலொன்றை தர்மகர்த்தர்கள் அடைமானம் வைத்துவிட்டதாகவும், அதினால் சுவாமிக்கு நைவேத்தியங்கூடக் கஷ்டமாய்ப் போயிருந்ததாகவும், அதின்பேரில் ஓர் தர்மாத்மா அந்த நிலத்தைத் தன் கைப்பணம் செலவழித்து மீட்டிக் கோயிலுக்குக்கொடுத்து விட்டதாகவும் தெரிகிறது. கவர்ன்மெண்டார் இந்தச் சிலையை ஓரிடத்தில் பத்திரம் செய்துவைக்க வேண்டுமென்றும், அல்லது சென்னைக் காட்சிச்சாலை (மியூசியம்) க்குக் கொடுத்துவிடவேண்டுமென்றும் கோயிலாரிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சிலையினால் பார்த்தசாரதிகோயில் ஒரு காலத்தில் மயிலாப்பூர் எல்லையோடு சேர்க்கப்பட்டிருந்ததாகவும், பல்லவர் காலமுதல் இருக்கிறதென்பதும் அறியப்படுகின்றன. இந்த முக்கியமான சிலையை இதுவரை எவரும் கவனியாமலிருந்தது ஆச்சரியமே. வடஆற்காடு, நெல்லூர் ஜில்லாக்களில் அகப்பட்டிருக்கிற சிலாசாஸனங்கள் எல்லாம் பழந் தமிழ் லிபியிலேயே இருப்பதால் அந்த ஜில்லாக்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்திருந்தன வென்பதும், விஜயநகர அரசர்கள் காலத்தில்தான் தெலுங்கு பாஷை அங்கே பாவியிருக்க வேண்டுமென்பதும் ஊகிக்கப்படுகின்றன.

கி. பி. 998-999 வருஷத்தில் சோழன் ராஜகேசரிவர்மன், ராஜராஜன் 1. இப்போது மைசூர் சமஸ்தானமா யிருக்கும் பிரதேசத்தின் மீது படையெடுத்துச்சென்றான். 1007. கி. பி. யில் அந்நாட்டுச் சாளுக்ய அரசனாகிய சத்தியாசிரயன் காலத்தில் எழுதிவைக்கப்பட்ட ஓர் சிலாசாஸனத்தில் "சோழன் வந்து நாட்டை எல்லாம் கொள்ளையிட்டுப் பெண்களையும் குழந்தைகளையும், பிராமணர்களையும் கொன்று கன்னிகைகளைக் கற்பழித்து ஜாதி தர்மங்களைக் குலைத்துவிட்டான்" என்று காணப்படுகிறது.

சோழ வமிச சரித்திரத்தில் ஒரு அருமையான விஷயம் சென்ற வருஷத்தில் விளங்கப்பட்டுள்ளது. அதாவது மிஸ்டர் வி. வெங்கய்யா ஜர்மனி வித்வான் கீல்ஹார்ன் என்பவரிடம் தமக்குக் கிடைத்த சில ஆதா

ரங்களை அனுப்பியதன் பேரில் மேற்படி ஜர்மனி வித்வான், சோழன் பரகேசரிவர்மன் ராஜராஜன் II. சிங்காதன மேறிய காலம் 1146 கி. பி. என்று வரையறுத்திருக்கிறார்.

விஜயநகரத்தரசனாகிய கிருஷ்ண தேவராயனைப்பற்றி முன்னமே தெரிந்த பல விஷயங்களோடு, இப்போது புதிதாய்த் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்கள் சில. அவையாவன: மேற்படி யரசன் காளஹஸ்திகோபுரங் கட்டினவனென்பதும், சில விஷ்ணு சிவாலயங்களுக்கு 10,000 பொன்தானம் செய்தானென்பதும், இலங்கையில் ஏதோ தான் யுத்தங்கள் ஜயித்தாகச் சொல்லிக்கொண்டானென்பதுமேயாம்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கு விஜயநகர அரசர்களாகிய சதாசிவனும், அவன் பின் வந்தவர்களும் புதுப்பாக்கம், வேப்பேரி, செம்பியம், நெடும்பாரை, வியாசர்பாடி என்ற கிராமங்களை இனும் விட்டதாகவும் தெரிகிறது.

சிங்கவரத்திற்குச் சமீபத்திலிருக்கும் ஒரு பாறையிலிருந்த இரண்டு கல்வெட்டுக்களை ஆராய்ந்ததில் அங்கே இளையபடரார், சந்திரநந்தியாசாரியர் என்ற இரண்டு சமணக்குருக்கள் ஒருவர் 30நாளும் மற்றொருவர் 57நாளும் பட்டினி கிடந்து உயிர் விட்டதாகத் தெரிகின்றது. இதையொழிய இன்னும் அநேக விஷயங்கள் மேற்படி ரிபோர்ட்டால் தெளிவாகின்றன. சென்ற 20 வருஷகாலமாக இந்த சிலாசாஸன பரீக்ஷைச் சபை சென்னையிலிருக்கின்றது. ஆனால் இந்த சபை அதிகாரிகள்தான் இது விஷயத்தில் சிரத்தையெடுத்து பல சங்கதிகள் பிரசுரித்து வருகின்றார்களே யொழிய, நமது சர்வகலாசங்கத்து பி. ஏ. எம். ஏ. க்கள் ஒருவராவது இதில் சிரத்தை காட்டவாவது, இதையெல்லாம் சேகரித்து ஒருவகைச் சரித்திரம் எழுதி முடிக்கவேண்டுமென்ற ஆசை காட்டாவாது செய்கிறார்களில்லை.

சிலாசாஸன பரிசோதகர்களே சரித்திர மெழுதுவது கஷ்டமான காரியம். சிலாசாஸன பரீக்ஷையும் ஒவ்வொரு ஜில்லாவாக நடத்திக்கொண்டு போவது நன்றாயிருக்கும். இப்படி அந்த ஜில்லாவில் கொஞ்சம் இந்த ஜில்லாவில் கொஞ்சமாகச் செய்துகொண்டு போவதினால் ஒரு பாகமாவது முற்றிலும் பரிசோதிக்கப்படாமல் போய்விடக்கூடுமென்று நமக்கு அச்சமுண்டாகின்றது. இதனை அதிகாரிகள் கவனிக்கற்பாலர்.

"சுதேசமித்திரன்."

AGRICULTURAL EDUCATION.
விவசாயக்கல்வி.

ஜெர்மனி, பிரான்சு, பெல்ஜியம், ஜப்பான், அமெரிக்கா முதலாகிய ராஜாங்கத்தார் விவசாய விருத்தியின் பொருட்டு என்ன செய்கிறார்களென்றும் நமது கருணை மிகுந்த இந்திய கவர்ன்மெண்டார் இந்தியாவில் என்ன செய்கிறார்களென்றும் சற்று கவனிப்போம். வட ஜெர்மனியில் மாத்திரம் 17 விவசாயக்கலாசாலைகள் இருக்கின்றன. பிரிஷியாதேசத்தில் 16 விவசாயப்பாடசாலைகள் இருக்கின்றன. இவைகளில் சுமார் 1663 பிள்ளைகள் படிக்கிறார்கள். இவர்கள் படிப்புக்காக ஷெராஜாங்கத்தார் சுமார் 232500 ரூபாய் செலவு செய்கிறார்கள். இன்னும் சிறுவர்களுக்கு விவசாயக்கல்வி சொல்லிக் கொடுப்பதற்கு ஷை பிரிஷ்யாவிலேயே 16 பள்ளிக்கூடங்களிருக்கின்றன. இவைகளுக்கு செலவு 156650 ரூ. பிடிக்கிறது. இதைத்தவிர 1710 விவசாயக் கூட்டங்களும் சுமார் 1500 கிளைக்கூட்டங்களும் இருக்கின்றன. இந்தக் கூட்டங்களுக்கு சுமார் 1, 48,095 ரூபாய் கொடுக்கிறார்கள். இவைகளெல்லாவற்றையும் விட சுமார் 70 விவசாய ரசாயன சாஸ்திரிகளை நியமித்து அவர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 12,6000 ரூ. கொடுத்து வருகிறார்கள்.

பிரான்சுதேசத்தில் 4 பெரிய விவசாயக் கலாசாலைகளும் நடுத்தரக் கலாசாலைகளும் 52 பாடசாலைகளுமிருக்கின்றன. இவைகளைத்தவிர விவசாயத்தில் தேர்ச்சியடைந்தவர்கள் சுமார் 50-பெயர்கள் ஊர் ஊராய் விவசாயிகளுக்கு வேண்டிய விஷயங்களைப் புகட்டிவருகிறார்கள். இதற்கெல்லாம் மொத்தச் செலவு சுமார் 839070 ரூபாய் ஆகிறது. இதைத் தவிர பிரான்சு கவர்ன்மெண்டார் மாடு குதிரைகளுக்கு வைத்தியம் செய்வதற்காக வருஷம் ஒன்றுக்கு சுமார் 600000 ரூபாய் செலவுசெய்கிறார்கள். பிரான்சு தேசத்தில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் வெவ்வேறு பாடங்கள் சொல்லிவைக்கிறார்கள். ஆண்பிள்ளைகளுக்கு நிலத்தைக் குறித்தும், எருவிடும் வழிகளைக் குறித்தும், பயிர்களைக் குறித்தும், செடிகளைக்குறித்தும், இயந்திரங்களைக் குறித்தும் சொல்லிக் கொடுக்கிறார்கள். பெண்களுக்கோ ரொட்டி சுடுவதைக் குறித்தும், பால் கறப்பதைக் குறித்தும், பாலிலிருந்து இயந்திர சகாயங்களால் வெண்ணெய், பாற்கட்டி முதலியவைகள் செய்வதைக் குறித்தும், பன்றி கோழி வளர்ப்பதைக் குறித்தும், காய்கறி விளைவிப்பதைக் குறித்தும், இதைப்போலொத்த வீட்டிலிருந்து செய்யக்கூடிய விவசாய சம்பந்த விஷயங்களைக் குறித்தும் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

20 லட்சம் ஜனங்களடங்கிய டென்மார்க்கு தேசத்தில் 1.65000 ரூபாய் வருஷவாரி விவசாய விருத்திக்காகச் செலவு செய்கிறார்கள். பெல்ஜியத்தில் சுமார் 1,50,000 ரூ. செலவுசெய்கிறார்கள். ஆகவே இப்போது சொல்லி

வந்த வட ஜெர்மனி, பிரஷ்யா, பிரான்சு, டென்மார்க், பெல்ஜியம் முதலாகிய தேசங்களின் மொத்த ஜனத்தொகை 7கோடி. இந்த 7கோடி ஜனங்களுக்கும் சுமார் 3 கோடிரூபாய் செலவு செய்கிறார்கள். பூலோகத்திலிருக்கப்பட்ட இராஜ்ஜியங்களி லெல்லாம் கட்டாயமாய் விருத்தியடையவேண்டிய தேசம் இவ்விந்தியாவே. நம் இந்திய கவர்ன்மெண்டார் தற்காலம் விவசாய விஷயத்தில் செலவு செய்வதற்கும் மற்ற ராஜாங்கத்தார் செய்வதற்கும் பேதம் பூனைக்கும் யானைக்கும் எவ்வளவோ அவ்வளவுதானிருக்கிறது. தற்காலத்தில் நம் இந்திய கவர்ன்மெண்டார் விவசாய விஷயத்தில் செலவு செய்வதானது பெருங்கடலில் காயத்தைக் கரைத்தால் கடல் நீர் எவ்வளவு வாசனை கொடுக்குமோ அவ்வளவு பிரயோஜனத்தைத் தான் கொடுக்கிறது. இப்போது தான் அங்கங்கே 2,3 விவசாயச் சோதனைப் பண்ணைகள் ஸ்தாபித்திருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் சோதனைப் பண்ணைகள் ஸ்தாபிப்பதுடன் பிரைமரி பாடசாலைகளிலும் உயர்தரப் பாடசாலைகளிலும் விவசாயத்தை ஒரு பாடமாகவைத்துப் பரீட்சை செய்தும், எந்தெந்த ஜில்லாவில் எந்தெந்த பயிர்கள் அதிக பலனைக் கொடுக்குமென்று பரிசோதித்துப்பார்த்து அவைகளை சிறு புஸ்தகங்களாக அச்சடித்து விவசாயிகளுக்குத் தர்மமாக கொடுத்தும், விவசாயத்தில் தேர்ந்தவர்களைக்கொண்டு ஒவ்வொரு ஊர்களிலும் சீர்திருத்தவேண்டிய வழிகளைக்குறித்து பிரசங்கங்கள் செய்வித்தும் வந்தாலொழிய நம் நாட்டைப் பீடித்துவரும் பஞ்சமானது தனக்கு இருக்க இதைவிட சிலாக்கியமான தேசம் கிடையாதென்று ஸ்திரமாக வேர் ஊன்றுமென்பதற்கு கிஞ்சிற்றேனும் சந்தேகமே கிடையாது. ச. ஜ. மி.

ON THE TWELVE NAMES OF THIRUMAL, III.

திருமாலின் பன்னிருநாமப் பொருள் விளக்கம்.

7-வது நாமம் திருவிக்கிரமன்.

பலிச்சக்கிரவர்த்தியைக் கொல்லத்திருமால் எடுத்த ஐந்தாவது அவதாரம் வாமனரூபம். அந்த வடிவத்துடன் பலியினிடம் சென்று மூன்று அடி நிலம் தருகவென்று யாசித்தார். பலி அதற்கு உடன்பட்டவுடனே திருமால் விசுவரூபங்கொண்டு பூமியை ஒரு அடியாக அளந்து பிறகு ஆகாயத்தையும் மற்றொரு அடியாக அளந்து மூன்றாம் அடிக்கு இடமில்லாததால் பலியின் தலையில் மூன்றாமடியை வைத்து அவனைப் பாதலத் தழுத்திக்கொன்றார். பலி

விரோசனன் மகன். விரோசனன் பிரகலாதன்மகன். வாமனவடிவமே திருவிக்கிரம வடிவமாக மாறியது. இக்கதை பாகவதத்தில் வாமனாவதாரங் கூறுமிடத்துக் கூறப்பட்டுள்ளது. இக்கதையை அடுத்துவரும் நாமத்திற்குங் கொள்க.

க. திரி என்பது வடசொல் மூன்றென்பது பொருள் - கிரமு - எனும் வடமொழிப் பகுதிக்குக் காலடிவைத்தல் என்பது பொருள். இதனால் திருவிக்கிரமன் என்பதன்பொருள், மூன்றுதரம் காலடிவைத்தவன் என்பது, த்ரீணிபதாவிசக்கரமே என்பது புருடசூக்தச்சுருதி. அரிவம்சத்திலும் இதுவே கூறப்பட்டுள்ளது. திருவிக்கிரமன் என்பதற்கு இங்கு எடுத்துக்காட்டிய பொருள் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் செய்தது.

தேசிகப் பிரபந்தத்தில் எ-வது நாமப்பாட்டு.

திருவிக் கிரமன் திகழ்தீ நிறத்தன் தெளிவுடைவாள்
உருவிக் கரங்களி லீரிரண் டேந்தி வலக்கழுத்தும்
செருவிக் கிரமத் தரக்கர்திக் கும்சிறந் தாடுமிறை
மருவிக் கரிகிரி மேல்வரந் தந்திடும் மன்னவனே.

இதில் எ-வது புண்டர தேவதையின் நிறம் ஆயுதம் முதலியன கூறப்பட்டுள்ளன. மூர்த்தியின் நிறம் - அக்கினியின் சோதிநிறம். ஆயுதங்கள் நான்கு கரங்களிலும் நான்கு கட்கங்கள் அதாவது வாள்கள். வலக்கழுத்தும் நிருதிதிக்கும் இருக்குமிடம். தியானமந்திரம் அக்னிவர்ணம் என்று தொடங்குமது. இங்குக் காட்டியபடி மூர்த்தியைத் தியானம் செய்து எ - வது புண்டரத்தை வலது கழுத்தில் தரித்தல் வேண்டுமென்பது கருத்து. த்ரி என வடமொழியிலுள்ளது திரு எனத்தமிழில் மருவி வழங்குவதால் நாமம் திருவிக்கிரமன் எனப்பட்டது. பலியைத் துவம்சம் செய்தவன் எனும்பெயரோடு இப்பெயர் தொடர்புடையது.

அ-வது நாமம் வாமனன்.

காசிபனுக்கு அதிதியிடத்துப் பிறந்த விஷ்ணு வாமனன். இவ்வவதாரமும் ஐந்தாவதாம். இந்நாமத்தின்கதை எ-வதுநாம விவரணக் கதையிலடங்கியிருத்தல் காண்க.

க. வாமனன் = அழகுள்ளவன்; குறுகிய வடிவன். வாமம் = அழகு; அதையுடையவன் வாமனன். குறுகிய வடிவம் அழகுள்ளதாதல் பற்றி அழகுள்ளவன் எனப்பட்டதுபோலும். அமரகோசத்தில் குறுகிய வடிவமுடையவனென்று கூறப்பட்டிருந்தும் அழகுள்ளதென்றுமட்டும் விளக்கப்பட்டது.

தேசிகப் பிரபந்தத்தின் அ-வது நாமப்பாட்டு.

வாமன னென்றன்வா மோதர மும்வாயு வின்றிசையுந்
தாம மடைந்து தருண வருக்க னிறத்தனுமாய்
சேம மரக்கலஞ் செம்பவி யீரிரண் டாற்றிகழும்
நாமங்கை மேவிய நான்முகன் வேதியி னம்பரனே.

இக்கவியில் எட்டாவது புண்டர தேவதையின் நிறம் ஆயுதம் முதலியன கூறப்பட்டுள்ளன. மூர்த்தியின் நிறம் உதிக்குஞ் சூரியன் றன்னிறம். ஆயுதம் நான்கு வச்சிரம். இடம் வாமோதரமும் வாயுவின் திக்கும். மந்திரம் வாமனம் என்று துவக்குமது. தியானபூர்வகமாக எட்டாவது புண்டரத்தை இடது வயிற்றில் தரித்தல் வேண்டுமெனல் காட்டப்பட்டது.

கூ-வது நாமம் சிரீதரன்.

சருவ பூதங்களையும் படைத்தவளான இலக்குமியை மார்பில் தரித்தவன் என்பது இத்தொடர்மொழியின் பொருள். திருமகளை மார்பில் தரித்தகதை விஷ்ணுபுராணம் முதலம்சத்தில் கூறப்பட்டுள்ளது. அது ஒன்பதாவது அத்தியாயத்தி லுள்ளது. துருவாச மகாமுனிவர் கொடுத்த பூமாலையைத் தேவேந்திரன் வாங்கித்தன் ஐராவதத்தின் கும்பத்தலத்தில் போட மதமிகுதியால் அது துதிக்கையால் எடுத்து முகர்ந்துபார்த்துக் கீழே எறிந்துவிட்டது. துருவாசர் "அடா மூடா" வென்று இந்திரனைப்பார்த்து அதட்டி "நான் வித்தியாதரமாதினிட மிருந்து வாங்கி வந்த ஸந்தான விருக்ஷத்தின் பூமாலையை நீவிநயத்துடன் வாங்கிச்சிரமேற் கொள்ளாதுஅலக்ஷியம் செய்ததால் உன்னுடைய மூன்று லோகமும் திருமகளின் கடாக்ஷமின்றி ஈனமான கதியை யடையக்கடவ" தென்று சபித்துவிட்டனர். இதன்படி தேவர்கள் இழிவடைந்து அசுரர்கள் மேலெழும்பினார்கள். தேவர்கள் பிரமனைச் சரணம்புக அப்பிரமன்கோரிக்கைப்படி எல்லாத் தேவரும் திருமாலைச்சரணம்புகவே, தேவர்களையும் அசுரர்களையும் பாற்கடலில் அமிர்தம் கடையும்படி நியோகித்தனர். அப்பொழுது அமிர்தம் விஷம் இவைகள் முதலியன தோன்றினமேல் திருமகளுந் தாமரை மலர்மேல் திவ்வியவடிவோடு தோன்றித் திருமாலின் மார்பில் போய்வீற்றிருந்து தேவர்களைக் குளிரக் கடாக்ஷித்தருளினள். திருமாலும் அமிர்தத்தை மோகினிப்பெண் வடிவங்கொண்டு தேவர்களுக்கு வழங்கினர். அன்றுமுதல் மூவுலகுந் திருமகளின் கிருபாநோக்கம் பெற்று விளங்கின.

(க.) சிரீ - தரன் = திருமகளைத் தரித்திருப்பவன் மார்பில் என்பது காட்டிய விருத்தாந்தத்தால் பெறப்பட்டது.

சிரீ-எனும் வடசொற்கு மூவுலகத்தவர்க்கும் சொரூபம், ஸ்திதி, பிரவிர்த்திகளுண்டாகும்படி அவர்களை அருள்புரிபவ ளென்றும் மூவுலகத்தவர்களாலும் அடையத்தக்கவ ளென்றும் நாராயண முனிவரால் பொருள் செய்யப்பட்டுள்ளது. சகல தோஷங்களையும் கேட்டறிந்து பரமபதத்தை அடைவிப்பவ ளென்றும் பொருள் கொள்ளப்பட்டது. எல்லாராலும் வணங்கப்படுபவள் என்பதும் ஓர்பொருள். சிரீயைத் தரித்தவன் சிரீதரன். சிரீயெனும் வடமொழிப்பதத்தின் பொருள் கொண்டு தமிழ்மொழி திருவாதலால் சிரீதரன் என்பதைத் திருமார்பன் எனவழங்கப் படுகின்றது. வேங்கட நாதாசாரியர் பரமபத சோபானமெனும் பிரபந்தத்து "மறுத்தார் திருவுடன் மார்பில் தரித்தவ" னென்று சிரீதரனை விளக்கி யுள்ளார்.

தேசிகப் பிரபந்தம் கூ-வது நாமப்பாட்டு.

சீரார் சிரீதர னுய்ச்சிவன் திக்கு மிடப்புயமும்
ஏரா டெங் கொண் டிலங்கு வேண் டாமரை மேனியனைப்
பாராயப் பட்ட மீரிரண் டாலும் பயமறுக்கும்
ஆரா வமுதத்தி மாமலை மேனின்ற வச்சுதனே.

இக்கவியில் கூ-வது புண்டர தேவதையின் நிறம் ஆயுதம் கூறப்பட்டன. மூர்த்தியது வெண்டாமரை நிறம். ஆயுதங்கள் நான்குபட்டயங்கள். இடம் ஈசானியதிக்கும் இடப்புயமும். சிரீதரம் எனவாரம்ப மாவது தியான மந்திரம். தியான பூருவகமாக கூ-வது புண்டரத்தை இடப்புயத்தில் தரிக்கவேண்டுமென்பது காட்டப்பட்டது.

பட்டயமென்பது வாளின் பேதம். பாரமாகிய வென்பது பார்என நிற்கின்றது. ஆயப்பட்டயம் நல்ல இரும்பாலயப் பட்டயம் எனக்கொள்க. அயத்தாலாய துஆயம்.

தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர்.

இந்தியாவிலே விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டியது. எனெனில், விவசாயிகளே இந்தியாவின் முக்காலே மூன்றுவீசம் குடிகள். அவர்களைக் கட்டிக்காப்பதுவே நாட்டைக் காப்பது. அவர்களைக் கவனியா தொழிவதுவே நாட்டின் அபிவிருத்தியில் திருஷ்டிவையாதது. இந்தியா முன்னுக்கு வரவேண்டுமானால், விவசாயத்தை விருத்திசெய்யுங்கள். அது ஆள்வோராலும் ஆளப்படுவோராலும் ஆகவேண்டிய காரியம்,

சூளாமணி நாடகம்.

(346-ம் பக்கத் தொடர்)

சுவலனசடி:—தம்மவர் சூழ்தரச் சாரண ரைவிளித்
தெந்தைகா ளுணர்மி னெனதுவேண் டலைநீர்.

சாரணர்:—வேந்தனே யினது வேண்டுகோ ளறிவேம்,
கிளத்துவங் கேளாய் "கீர்த்தியீ ரெற்கு
தீவினை யாகிய பகையைச்சே தித்து
உய்தற் கியைந்ததோ ரின்னுரை யையுப
தேசித் திடுமின் றேவுளீ" ரென்பதே.

சுவலனசடி:—இருவிசும் பாதி யேமூல கோம்பு
மருகக் கட்வுளிவ் வண்ணல்சா லடிகளே !
சொற்றுநுஞ் சொல்லுஞ் சரதமே யாகும்.

சாரணர்:—ஆயி னறைகுவே மரயனே கேட்டி,
"அவரவர் விதிவழி யடையற் கியலுமால் ;
முன்செய் தீவினை முடிவிலா திருக்கின்
இம்மையி லதற்கியைந் தெடுப்பர் சனனமே.
எடுத்துமோர்ந் திலரா யிருமடங் கழிவினை
யுளுற்றின் றுயருழந் தொழிவர் நரகரோ !
நன்னெறி யொழுகினோர் நாளுமாண் பினராய்
துறக்கம் புகுவர் துயரிலா தவராய்.
எவ்வினை யாளரு மின்புற வேண்டின்
கடவுளின் றியானங் கருதவே வேண்டும்.
அன்னவை புரியி னுண்டகை யவரை
யுய்விப் பானு லுறுதிநீ கொள்ளே"
என்னக் கிளத்தலு மேந்தலுள் ளத்தில்
காட்சியா மோர்சுடர் காணக் கிளர்ந்ததால்
மனைவியுந் தானு மாணறி வுடையராய்
செப்பக் கிடந்தனர் செல்வரா யாண்டு.
சகதபி நந்தன ரென்னுஞ் சாரணர்
அரயனுக் குரிய வாசிசொற் றூராய்
விசும்பா ரூத்தந் நாடுமே யினரால்.
இங்ஙனஞ் சாரண ரும்பரே கியபின்
கொளுத் திய வறிவினள் கூர்வேற் கண்ணினள்

சுயம்பிரபை:—தாணுவைக் குறித்துச் சக்ரவா ளம்மெனும்
நோன்புநோற் றுளாய் நொய்தினின் முடிப்பித்
தெவ்வுல கினுந்தனக் கிணையிலை யென்னச்
சொற்றற் கிடனாய்த் தொல்பே ரழகொடு
சீர்த்தியும் பூர்த்தியாய் சேரத் தரித்த
தடவரை நாப்பண் டம்மனியச் சினகரங்
குயிற்றிக் கோபனைக் குரங்குத விழைத்து
ஒப்பனை செய்து வொளிபெற விருத்தி
அன்புமிக் கூற வடிமிசை யிறைஞ்சி
“ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் றிருவடி வணங்கினம்.
காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பனை
தேமலர் மாரியை திருமறு மார்பனை
மாமலர் வண்ணநின் மலரடி வணங்கினம்.
ஆரருள் பயந்தனை யாழ்துய ரவித்தனை
ஓரரு ளாழியை யுலகுடை யொருவனை
ஓரரு ளாழியை யுலகுடை யொருவனை
சீரருண் மொழியநின் றிருவடி தொழுதனம்.
அருகக் கடவுணி னருட்கம லத்தினை
யேற்றித் தொழுதன னென்னிறை யடைக்கலம்.
காப்பாய் கசிதரு கருணையங் கடலே !
ஆர்த்திய ளெனதக மமருவாய் தேவே !
நின்னடி மையா னிகரிலோ யெனக்காத்
திடனின் பாரமாற் றினையை யளித்தி
ஆண்டகாய் ! காத்தி யடியனை யின்னே”
எனத்துதித் தாளா யிறைமாட் டுள்ள
நிருமா லியத்தை நெற்றிச் சிரத்தின்
மிசைசூ டினளாய் மிக்கவன் மாட்டும்
மிகுதியை யீந்து வேணவா வொடுசில
கடிகை யளவுங் காற்றொழு தனளால்.

சுவலனசடி:—(இறைஞ்சிய மகளை யினிதெடுத் தாணுய்)
கண்ணே கமலமே கவின்பெறு மணியே
பொன்னே பொதுளிய பொற்பி னலாளே
என்மனங் களிக்க வெழுந்தபா மிசியே

பாவாய் நின்னைப் பயந்தநாண் முதலாய்
வரம்பில் வளன்கள் வாய்ப்பவெ னுள்ளம்
அலகிலாப் பேரா நந்தமெய் தியதால்.
பிறைமுகத் தணங்கே பேசுவ லென்னோ
நின்னனைப் புக்கா ணீண்மா ளிகையைப்
போயவ ணீயும் போனக முண்ணுய்,
இனியிவ ணிருக்க வியலா தேகுதி.

சுயம்பிரபை:—ஆயி னன்றவ ணுகுவே னண்ணல்
மீள்குதிர் பின்னே வியன்குணத் தெந்தாய்!
வாரீர் தோழிகாள் வளநகர் செல்வேம்.

தோழியர்:—நுண்ணவிர் மருங்குலாய் நொய்தினிற் செல்வம்
நாமிவ ணுகி நாழிகை பலகடந்
தாயின மையா லணிநகர் விடுத்து
வாரா யணங்கே மன்னர்பின் னுவர்.

(யாவருஞ் சென்றனர்)

(இன்னும் வரும்)

வி. கே. அரங்காசாரியர்.

SARASWATHI.

ஸரஸ்வதி.

4-வது அதிகாரம்.

திருவள்ளூர் தை அமாவாசை விசேஷநாள்.

மேலத்தியாயத்தில் ஏற்பட்ட விஷயங்கள் நிகழ்ந்த அன்றே பரதகண்டத்தில் சென்னை நகர்க்கு 2 காதம் வடதிசையில் சிறந்த விஷ்ணுவாலயம் ஒன்றைக் கர்பத்திலடக்கிக் கிடக்கும் திருவள்ளூர் என்னும் க்ஷேத்திரத்தில் இக்கதையைச் சம்பந்தப்பட்ட சிலவிசேஷங்கள் நடந்தன. அவைகளையிடையில் விவரியா தொழிந்தால் கதையைப் பூர்த்திசெய்வது கஷ்ட சாத்தியமாகும். அந்தக்கரண வசம் நாமாகாது அதையடக்கியாளும் யோக்கியதையை யடைந்து விட்ட நாம் பாரீசிலும் திருவள்ளூரிலும் ஏககாலத்தில் இருப்பது அனுசிதமான கொள்கையாகாது. அந்தக்கரணத்தை முற்றும் ஒடுக்கிய புண்ணியர்களாசாரானுட்டானங்களை நாம் அனுகரணமேனும் செய்யப்

போகாதா? மனமாய் நிற்போர்க்கு மனப்படத்தில் நிகழ்ந்ததோற்றங்கள் விஷயமாய் தூரஞ் சமீபம் என்னும்அஞ்ஞானம் நிசழுமோ? எனவே கதைவிஷயமாயாவது நாம் சூக்குமதேகிகளிட மிருந்து அவர்கள் மனக் கண்ணை இரவலாய்ப்பெறுவோமாக. இங்கேஅமாவாசைப்புண்ணியகாலத்தில் ஜனார்த்தனன் திவ்ய தரிசனைக்காக அனேகாயிரம் ஜனங்கள் திருவள்ளூரை யடைந்து அக்கிராமத்தை ஜனக்காடாக்கி விட்டார்கள். அடுத்தடுத்துச் சென்னையினின்றும் வந்துகொண்டிருந்த புகைவண்டிக் கோர்வைகளில் வந்திறங்கிய ஜனங்களும், முதுகிலும் தோளிலும் முடியிலும் விதம்விதமாய்க்கட்டிய மூட்டைகளைச் சுமந்து வருந்திய ஏழைக்குடிகளும் கோயிலையடுத்த திருக்குளத்தைச் சூழ்ந்து நின்றதுவே அமாவாசை வேடிக்கையென்று சொல்லலாம். பட்டினத்து மனுஷியர்களைப் பட்டிக்காட்டார் வெறிக்க வெறிக்கப்பார்த்துப் பெருமூச்சு விட்டும், பட்டிக்காட்டாரைப் பட்டினத்தார் பாதிப்பல்லைக்காட்டிச் சிரித்தும் மரியாதை கொண்டாடினார்கள். குலஸ்திரீகள் சிலர் பொதுமாதொருத்தியின் குலுங்கிய நடையைக்கண்டு நொடித்தார்கள். அவளதைப்பொருது சீறி "என்னைப் பார்த்து ஏன் வீங்கி வெடிக்கிறீர்கள். எங்கள் பிழைப் பின்வாயில் மண்ணைப்போட எத்தனையோ போலிச்சமுசாரிகள் ஏற்பட்டு விட்டார்களே. நாங்கள்இனி இடைகுலுக்கியென்ன?நடைமினுக்கியென்ன?" என்று பேசிப் போயினள். உடம்பெல்லாம் பட்டும் சரிகையும் போர்த்த பெரிய மனுஷன் ஒருவன் லேடிசகிதனாய் நர்த்தனத்துடன் ஒருபுறம் சார்ந்தான். அவனைப் பின்தொடர்ந்து 10-அடி தூரத்தில் அவன் பெண்சாதிவந்து கொண்டிருந்தாள். குடிவெறிதலைக்கேறிக் குளத்தி மதிள் மீது சாய்ந்த அன்னோன் பெண்டாவாளை அரைப்பார்வையாய் திரும்பிப் பார்த்து "என்னடி எந்தமாப்பிள்ளையோடுசரசம்செய்துஅசைகிறாய்?" என்றுரத்துக்கேட்க,அவள் புன்முறுவல்செய்து "உமக்குச் சொகுசுலேடி யுற்ற அளவும் எனக்கு ஆண் பஞ்ச முண்டோ!" வென்று பிரதி கூறினாள். இதைச்செவியேற்ற குடியன் சபாஷ்கூறி பெண்சாதி க்ஷேமத்திற்கென்று ஒருபையன்ட்டு சாராயத்துப் புட்டியைக் காலிசெய்து வேசி திருவடிகளில் அடியற்ற பனைபோல் வீழ்ந்தான்.

ஜனங்கள் அமாவாசை கொண்டாடும் ஆரவார சம்பிரமத்தை யாரால் சொல்லியாகும்! இன்னும் திரும்புங்காலையில் இந்தபிரஜைகள் படும்பாட்டை அந்த ரயில்வேஸ்டேஷன்தான் அறியும். இவர்கள் நாகரிகங்களெல்லாம் அங்கு வெளிப்படையானபடி சிலபெண்கள் மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் சற்குணங்களை முற்றும் மறந்து பெருங் கும்பல்கள் மத்தியில் மட்டித்தனமாய் விழுந்து முன்னே மூர்க்கனிடிக்கப்பின்னே மடையன் பிடிக்கக் குறுக்கே சடையன்பாய இருமருங்கும் கடையர் நெருங்கித்தழுவப் பதிவிரதை நீசத்துவமடைந்து ரயிலேறிச் சென்னை சேர்ந்து கிருஹமடைந்து பழையகுடியானவுடனே பத்தினிகளாகிவிடுகிறார்களென்பது நிஸ்ஸந்தேகமான விஷயம்.

விற்க, திருவள்ளூர் தெற்குமாட வீதியில் கற்கட்டடமாடிவீடொன்றின் முன்கட்டின் கூடத்தில் முற்றத்தில் கால் நீட்டித் தூணுடன் சார்ந்த மங்கைப் பருவமடைந்த ஸ்திரீ ஒருவள் ஏவலாள ஞெருவனுக்கு இராப்பலகாரத்தைச் சமைப்பதற்கு உபயோகமாகும் சில நூதனமுறைகளைப்போதித்துக் கொண்டிருந்தாள். இடையிடையில் இவள் பிரயோகித்த "ஜாகிருதை" "ஜாகிருதை" என்னும் கொடுஞ்சொற்கள் அவனுயிரை வாட்டின. கைகண்ட போலீஸதிகாரிகள்கூட அவ்வளவு ரூடியாய்ப் பேச அறியார்கள். இந்த நற்சமயத்தில் பரமஜாகிருதையாய் உள்நுழைந்த ஒருவன், "அம்மா ஜாகிருதையாய்த்தான் வந்தே" னென்று சொல்லிக்கொண்டே அவளைநெருங்கினன். பிரபுஸ்திரீ "இவன்யார்" என்று சொல்லிக்கொண்டே திருப்பிப் பார்த்து எமனைக்கண்ட உயிர்போல் வாடி ஒடுங்கினுள்.

உடனே சிதறிய சித்தத்தைச்சேர்த்துப் பிடித்து, "என்முருகா, என்ன விசேஷம்? ஏன்வந்தாய்? மதிகெட்டவனே மடைய!" என்றவனை யுறுக்கினுள்.

"ஹோ! ஹோ! ரவாமணிமடையகடைய-என்றென்னை ஏசலுமாச்சோ? எஜமானிச்சிஸ்தானமோ-ஆமாம் இந்தவாழ்வு-முருகனுல் வந்ததல்லவோ?" என்று வந்தவன் வெறுத்துரைத்ததை ஊழியனும் கேட்டு மலைத்துப்போயினன்.

ரவாமணியோ "ஆ-ஆ - ஆ-என்ன-என்ன-அடே-உன்துணிவு" என்றிவனைப்பார்த்துக் கூவி,

வேலையாளைத் திரும்பிப்பார்த்து - "அடே நீ, போ வேலையைப்பார்" என்று கட்டளை யிட்டனள்.

அவன் "அம்மா இன்னும் ரவைப்புமா செய்யும்விதம்சொல்லவில்லையே" என்ன, இவள் "கல்லெடுப்புமா செய்தழுபோ நாயே-நட-பொறுத்துச் சொல்வே"னென்ன-மடையன் சமையல் கட்டேகினன்.

இப்பால் ரவாமணி வந்தவனைத்தெருக்கதவை யடைக்கச் செய்து முருகனை அருகே இருக்க அமைத்து அவனுக்குக் கள்ள உபசாரம் செய்ய ஆரம்பித்தனள்.

ரவாமணி:—என்ன அப்பா-உனக்குக் கொடுத்த ஆயிரம் ரூபாயும் போதாமல் மாதம் பத்துவராகன் பெண்ஷனும் என்னுயுள் பரியந்தம் கொடுத்து வருகிறேனென்று வாக்குத்தத்தம் செய்தும், என்னை வஞ்சித்து இவ்விடம் ஏன்வந்தாய்?

முருகன் :—இல்லை ரவாமணி, நீகொடுத்த பொருள் முழுதும் கள்ளும் சூதும் கொள்ளைகொண்டன. செலவிற்கில்லாமல் ரூ. 500 கேட்கத்தான் இவ்விடம் வந்தேன்.

ரவா:—ஐயோ! 500 ரூபாய்க்கு எங்கேபோகிறது ?

முரு:—ஏன் பசப்புகின்றாய்? உன்னும்பிடையான்பணம் பாழாய்ப் போச்சுதா? நீ தாலியறுத்தாயேயொழிய கண்டமணியும் அறுத்தையோ? காதோலை நீத்தையோகள்ளி ?

ரவா:—அட்டா ! இப்படி நீ பேசவும் காலமா அடாபாவி.

முரு:—அடி சண்டாளி-உன்னைவேண்டித்தானே நான் எஜமானனைக் கொன்றேன். என்னடி நீகள்ளித்தனம் செய்கிறாய்?

ரவாமணி.—முருகா-முருகா - ஜாகிருதை-ஜாகிருதை. குரலையடக்கிப்பேசு. (மெலிந்தசப்தத்துடன்) இப்போது 200-ரூபாய் கொடுக்கிறேன். தைமீ மிகுதியை அனுப்பிவைக்கிறேன். நீ போய்விடு-போய்விடு-போய்விடு.

முருகன்—அழு-அழு-ஒழியுது-நீஎங்கேபோய்விடப்போகிறாய்? மண்டையுள்ளவரையில் சளியற்றுப்போகுதா-பார்த்துக்கொள்வோம்.

ரவாமணி—"தெய்வமே!தெய்வமே!" என்று வாய்சொல்ல-உனக்கும் தெய்வமா என்று மனசாக்ஷி கூற-இருதலைக்கொள்ளி கொண்டவள்போல் பிரம்மித்து படுக்கையறையைச்சென்று பெட்டியைத்திறந்து பணத்தை யெடுத்துப் பெட்டியையும் மூடாது திரும்பினவள் தன் படுக்கையின் அருகில் உன்மத்தனாய் நின்ற முருகனைக் கண்டு மனம் திடுக்கிட்டு இடிவிழுந்தாற்போல் உளம் நடுங்கி "என்னடா-உன்மமதை- என் படுக்கையறையையும் பயமற்று நுழைந்தாய்" என்று கொதித்தனள்.

முருகன்—இந்த உத்தமா பதிவிரதையை ஒருவன் மனசினாற் றீண்டினாலும் பத்தியெரியாதோ ! வென்று கூறிப் பரிகசித்தான்.

ரவாமணி—மூர்க்க ! நான் விபசாரம் செய்ததையும் கண்டனையோ? கழுதை.

முருகன்—லக்ஷணம்-வெகுலட்சணம் ; ஒரு முத்தம் கொடு பார்ப்போமென்று அவளை மூர்க்கத்தனமாய்க் கட்டிப்பிடித்துத் தழுவ எத்தனித்தான். ரவாமணியோ மேனிவெதும்பி ரோத்திராகாரமாய் ஆக்ருஷமடைந்து அருகேகிடந்த கத்தியொன்றைத்தாவியெடுத்து மாகாளியெனப்பொங்கி அவன் மார்பில்வச்சிரமெனத்தாக்கி ரத்தாசயத்தைப் போக்கி ஒரு க்ஷணத்தில் அவன் உயிரைக் கொள்ளை கொண்டு "இந்த மிருகத்திற்குமா என் தேகத்தை தத்தம் செய்வது" என்று பொங்கிச்சிரித்துக்"கடையன் தீண்டிய இத்தேகத்தைஇனிச்சுமந்து தாழேன்" என்று சப்தம் செய்து, பெட்டியைப் பின்னும் திறந்து அதினின்றும் முற்பட்டே எதிர்காலத்து நிகழ்ச்சிக்காக யுத்தேசித்துத்தயார் செய்து வைத்திருந்த பாஷாணத் திராவகப்புட்டியைச்

சீலுடைத்துத் திறந்து ஒரு பாதி தங்கக்கிண்ணத்திலிட்டு அமிர்த பானம் பண்ணுபவள்போல், முகங்கோணுமல், அகங்கோணுமல் அதைச் சாவதானமாயுண்டு கிண்ணத்தை யேந்திய கையளாய் படுக்கையிற்சாய்ந்து மாய்ந்தாள். "கேடுவரும்பின்னே மதிகெட்டு வரும் முன்னே" என்னும்பழமொழிக் கிலக்குமானுள்.

5-வ து அதிகாரம்.

லண்டன்—பார்லிமேண்டு வீதி.

சுகங்கலவாத துக்கமும், துக்கம் கலவாத சுகமும் இவ்வுலகத்தே கிடையாவாகையால் நாமும் இச்சிறுகதையில் சுகதுக்க மிரண்டையும் கலந்துகேட்கநேரிடுகிறது. இந்திரிய சேட்டையைக் கடந்து பாரமார்த்திக தசையையடைந்த மகான்களுக்கே பூரண சுகம் சித்திக்கும். வியவகார நிலையில் நாம் துக்க மொழியைக் கோருவது மடைமையேயாம். ஜீவன் முக்தரே சுகதுக்கத்தைச் சமத்துவமாய்ப் பார்க்க வல்லவர். இப்போது சூரியாஸ்தமான சமயம் நெருங்கியதால் நாமும் சூரியனைப் பின்பற்றி மேற்கே சென்று பாதியுலகத்தின்மீது தன் ஆஞ்ஞா சக்கிரத்தைச் செலுத்தித்தெய்வத்துவம் அடைந்துள்ள பெருமாட்டியார், முடி மன்னர் முடிதாழ்ந்து வணங்கும் பொன் முடியார், பொறுமையில் பூமியை வென்றூர், மேன்மையில் தேவரை யொப்பார், ஞானத்தில் ஞானிகள் போற்றநிற்பாராகி லோக மாதவாய் விளங்கும் விக்டோரியா சக்ரவர்த்தினியார் வாழ்ந்த பொன்னகரத்தைச் சேர்வோமாக.

"ஞானப்பிரகாசம்! எப்போது அமெரிக்காவிலிருந்து வந்தனை? என்ன விசேஷமங்கேசொல் கேட்போம்?" என்று வினவிய பாஸ்கரஸ்வாமிக்கு "ஒன்றும் புதுமையில்லை பாஸ்கரம். இந்தப் பிரதேசத்திலும் அமெரிக்காவிலும் சுமார் 10-வருஷகாலமாக வசித்து வந்த நந்தேசத்து உயர்குலச் சிறுவனொருவன் நியூயார்க் பட்டினத்திற் பாழாய்ப் போகிறுன். அவனைக் குறித்துப் பலரும் தூஷித்துப் பேசுவது எனக்கு வெகு நாணமாயிருந்தது. நீ யறியாத வேறு விசேஷம் ஒன்று மில்லையப்பா. அத்தையும் லீலாவதியும் என்ன ஆனுர்களோ?உனக்கேதாவது கடிதம்கிடைத்ததா?" என்னும்பிரஸ்னையுடன் பிரதி கூறினுன்.

பாஸ்.—இரு ஞானப்பிரகாசம், அதோ ஒரு கிருஹம் தீப்பற்றிக் கொண்டாற் போற் காண்கிறது, நம்மாலான உதவி செய்வோம் சீக்கரம் வா.

ஞா.—"தடையென்ன நட" வென்று சொல்லிக்கொண்டு பாஸ்கரனை நெருங்கிப்பின் சென்றுன்.

அக்கினி முற்றுகையிட்ட கட்டடத்தை யடுத்தபோது பாஸ்காஸ்வாமி அம்மாளிகையின் மேற்படியின் சாளரவழியாய் சித்தங்கலங்கி நின்ற சரஸ்வதியைக் கண்டு முன்பின் யோசியாது மறமறவென்று கட்டுக் கோப்புகள் முறித்து விழும் அவ்வீட்டினுள் நுழைந்து, அக்கினிச் சுவாலையும் புகையின் கொடுமையும் எதிர்த்துப் போர்புரிய, மனவலியின் திறத்தால் தேகம் சஹியாது ஒருபுறம் தீ பிடித்தெரியும் சுழற்படியில் கால்பாவாது மூன்றே தாண்டாய்த் தாண்டியேறி சரஸ்வதி மரம்போல் நின்ற சிறிய உள்ளடைந்து சிலம்பம் பழகிய தன் வலியகரத்தினால் சாளரத்தின் இரும்புக் கம்பி யொன்றைப் பேர்த்தெரிந்து, அழகிய திரைகள் மாட்டியிருந்த வலிய கயிறொன்றை யறுத்துச் சன்னலின் நடுக்கம்பத்தில் இறுகக்கட்டிப் புறத்தேயெறிந்து அதன்வழி பிரக்ஞையற்றிருந்த சுகுணமாதை பரமஜாக்கிருதையாய்த் தூக்கிக்கொண்டு இறங்கி அடுத்த கிருகத்தின் தளத்தை யடைந்து, படிவழி உள்ளே சென்று அங்கோர்புறம்கிடந்த டிராயிங்ரூம் சோபாவொன்றின்மீது அவளைக்கிடத்துவதற்குள் வீதியில் மனக்கலக்கமுற்று மாண்டவர்போற் கிடந்த ஜான்சன் துரையும் துரைசானியும், இந்த வீட்டுக்குடையாரும், ஞானப் பிரகாசம் முதலிய பலரும் ஓடிவந்து, சரஸ்வதியை மூர்ச்சை தெளிவிப்போரும் பாஸ்கரனை ஸ்தோத்திரம் செய்வாரும், தெய்வத்தைக் கொண்டாடுவாருமாய் சந்தோஷ கோஷ்டமிட்டார்கள். இதற்குள் சர்க்கார் சேவகர் முதலியோர் பிரயாசையால் அடுத்த வீட்டைப் பிடித்த அக்கினி தணிய ஆரம்பித்தது. அக்கம்பக்கத்து வீடுகளுக்கு அபாயம் நேரிடாமல் சர்வ ஜாகிருதையாய் யாவரும் உழைத்தார்கள். ஒரு நாழிகைக்குள் சரஸ்வதி யம்மனும் தக்க முயற்சிகளால் மிருத்துவினிடமிருந்து மீட்கப்பட்டாள். ஜான்சன்கள் வீட்டையிழந்தும், வீட்டையடைந்தவர்போற் பரம சந்துஷ்டி யடைந்து சரஸ்வதியையும் பாஸ்கரனையும் மாறிமாறிப் பித்தர்களெனத் தழுவி, அவர்கள் மாட்டு பெற்றோரும் மற்றோரும் அதிசயிக்கத்தக்க பேரன்பைப்பாராட்டினார்கள். துரையவர்கள் அக்கினிக்குத் தப்பிய தன் சொத்துக்களை, பரிஜனங்கள் கவனிக்க உத்திரவளித்து ஞானப்ரகாசம் ஸரஸ்வதியுடன் தமது விலைபெற்ற ரதத்தின் மேற்கொண்டு, ரதத்தைநடத்தி அடுத்த இண்டியா ஹோட்டலையடைந்தார். முற்பட்டே அவணடைந்து செய்யத்தக்கனசெய்துமுடித்து நம்மவர்கள்வரவையெதிர்பார்த்து நின்ற ஜான்சன் துரைசானி எதிர் சென்றழைத்துச் செல்ல நம்மனோர் மேல்மாடியடைந்து யாவரும் மனமொத்து உண்டியருந்திச் சற்றுநேரம் ஞானசல்லாபமாய் காலட்சேபம் செய்து பின்னர் ஒருவர்க்கொருவர் "நல்லிரவு" (Goodnight) கூறிப்பிரிந்து அவரவர்க்கேற்பட்டிருந்த விடுதிகளை யடைந்து இரவு காலத்தை சுழுத்தி யிரவில்போக்கினார்கள். சுழுத்திசுகம் இவர்களன்றோ முற்றும் அடைய அருகராயினர். பகவான் அருளியநித்திய சங்காரமே அவர் சர்வசங்காரத்தை யனுமானிக்கும் சாதனமாயுள்ளது. உள்ளபடியே வயற்று விஷயமாய் ஒரு

நாள் முழுமையும் உழைத்துக் களைத்த ஏழை யொருவனுக்கு இரவின்கண் தன்னை மறக்கச்செய்யும் தூக்கம் எத்துணை அவசியமோ, அத்துணையும் எண்ணிக்கைகடந்த ஜென்மங்கள் எடுத்தெடுத்து சம்சாரப் பாழ்ங்கடலில் சுகதுக்கமா மலைகளால் மொத்துண்டு அவதியுற்று ஏங்கி வருந்தும் ஜீவனுக்கு எவ்வளவு காலம் பிறந்திறந்தொழிந்ததோ அவ்வளவு காலம் மகா சுழுத்தி மூடவேண்டிய தத்தியாவசியமென்னும் பெரியோர் கூற்றுப் பட்டப் பகலாய் விளங்கும் என்பது நிஸ்ஸந்தேகம். பரமேஸ்வரனுடைய சங்கார விர்த்தியமும் ஆன்மாக்கள் க்ஷேமத்தைக்கோறியே முடிவதென்றபடி.

இப்பால் சூரியோதயத்திற்கே படுக்கையை நீத்த ஞானப்பிரகாசமும் காலைக்கடன் முடித்து முழு உடுப்புடுத்தி தன் ஜாகைக்குச் செல்ல பாஸ்கரத்தை விடையிரந்தபோது "அப்பா நானும் உடன்செல்வேன். காபியருந்து. நஞ்சினேகர்களிடம் சொல்லிப் போவோம். இரும்" என்ற பாஸ்கரன் உபசார வார்த்தைகளைக்கேட்டுக் கொண்டே அவரரறைக்குள் நுழைந்த ஜான்சன் துரையவர்கள் ஞானப் பிரகாசத்தைப் பார்த்து "ஐயா, சற்றே தயவு செய்து இவ்வாசனத்திருங்கள். தங்களிடம் முக்கியமாய்த் தெரிவிக்கத்தக்க விஷயமொன்றுண்டு. நம்முடைய சினேகர், சரஸ்வதியை மும்முறையும் பிராணபாயத்தினின்றும் காப்பாற்றினாரென்று நேற்றிரவே உம்மிடம் வெளியிட்டேனல்லவா. அவர் ஆண்மை, சுகுணம், நல்லொழுக்கம், கம்பீர நடை, குலவிசேடம், பாண்டித்துவம், புத்தி கூர்மை — இவைகளைக் குறித்து 6-மாத காலமாய்ப் பல பிரபுக்களால் பூரணமாய்த் தெரிந்துகொண்டேன். இவர் விஷயமாய் எனக்கும் மிஸ்டர் மூரென்னும் வங்காள நாட்டுப் பிரபுவிற்கும் பெரிய கரேஸ்பாண்ட்டேன்ஸ் நடந்தேறிவந்து இன்றைய மெயிலில் இவரெண்ணங்கட் கனுகுணமான கடிதமொன்று எனக்கு இந்தியாவினின்றும் கிடைத்துள்ளது. இவரோ நாளதுஷை மார்ச்சுமீ 20உ புறப்படும் பீ அன்டு கம்பெனியாரின் ஸ்டீமர் ஒன்றேறி சென்னைக்குத் திரும்புவதாக எனக்குக் கூறியுள்ளார். அதுகாறும் இவரை என் குடும்பத்தில் ஒருவராக விருந்து எங்களை சந்தோஷிப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். தாங்கள் அவரைசம்மதிக்கச் செய்வதுமன்றிஅடிக்கடி எங்கள் நூதனகிருகத்திற்குவிஜயஞ்செய்து எங்களை கௌரவப்படுத்தும்படியும் பிரார்த்திக்கின்றேன்" என்றுகூறிகாலந்தாழ்க்காமல் சுபசமாச்சாரம் தெரிவிப்பான் சரஸ்வதியம்மாள்வாசித்துக்கொண்டிருந்த தனியறைக்குச் சென்றார்.

சரஸ்வதி காலைப்போசனம் கால்வயிறருந்தி, தாயெழுதிய கடிதத்தைப் பன்முறை வாசித்துக் கண்களிலொத்தி, மயிர்முடிகோதி, கொண்டை புனைந்து, சர்வபூஷண விக்கிருதையாகி, வெள்ளையுடுத்தி, நிலக்கண்ணடிமுன்தன் சாயலைப்பரிட்சித்து திருப்தியடைந்து, அகமகிழ்ச்சியை முகமகிழ்ச்சி காட்டிக்கொடுக்க தேகபரவசமாய் அருகிலிருந்த சிறிய மணியொன்றை யசைத்தனள்; உடனே ஊழியன் ஒருவன் ஓடிவந்து "அம்மா கட்டளையாதோ" வெ

ன்று கைக்கட்டிநின்றான். "மிஸ்டர் பாஸ்கரஸ்வாமி முதலியாரிடம் சென்று நான் அவரைக் காணவருகிறேன் என்று தெரிவி" என்றனள்.

அவன் அவளாணையைச் சிரமேற்றுமுதலியார் அவர்களிடம் "லேடிடாக்டர் வருகிறார்களெ"ன்று தெரிவித்துவிட்டு பவுன் ஒன்று பரிசுபெற்று வெளியே சென்றான்.

பாரிஸ்டர் அவர்களது தற்கால மனநிலைமையை யாரறியக்கூடும்! அவர் மனம் சென்றவிடம் அவரேயறியார்போலும். அவருக்கு நனவே கனவாயிற்று. அவர் சுகக்கடற் படிந்துமுற்றும் சுகவடிவெய்தினராதலான் பிரபஞ்ச விசேஷமொன்று மறிந்திலர். இந்த திவ்யாவவசரத்து, மெல்லென அவ்வறைநுழைந்த சரஸ்வதி அவரிருந்த சோபாவை நெருங்கிஸ்மரணையற்றவர் போற் காணப்பட்ட அவர் நிலையின் குறிப்பை முற்றுமுணர்ந்து, வீரலக்குமியிருப்பிடமாகக்கொண்ட அவர் அழகிய புஜத்தின்மீது தன் ஹஸ்தத்தை வைத்து "மிஸ்டர் பாஸ்கரஸ்வாமி." என்றுமிருதுவாய்மொழிந்தனள். முதலியார் ஸ்பரிசசுகமும் செவியுணர்வும் கிடைக்கவே, திடுக்கிட்டு விழித்துவரிட்டுப்பார்த்து "கண்மணி! என்னன்பே!" என்று கூறி சரஸ்வதியை மார்புறத் தழுவி முத்தமிட்டு கண்களிலானந்த பாஷ்பம் சொரிந்தார். கங்கு கரைகாணாத அவருள்ளன்பின் கடலிலமிழ்ந்திய சரஸ்வதியும் அவளையறியா தியற்கையாயெழுந்த மெய்யன்பால் தானும் அவ்வரை மெய்மறந்து ஆலிங்கனம் செய்து அவர்வடித்த கண்ணீரை முத்தமிட்டுப்போக்கி அடியற்ற மரம்போல் அரை நாழிகை பரியந்தம் பர்வதாகாரமாய் விசாலித்திருந்த அவர் மார்மீது வீழ்ந்து பொருமினள்.

உடலும் கரணமும் ஒத்துச் சுகித்த அவ்விருவர் அன்பைக்குறித்துஆகாய வீதியிற்சென்ற சித்தர்குழாமும் வியப்படைந்து அவர்கட்கு மங்கலந்தழைக்க வாழ்த்திச் சென்றனரென்றால் மக்களிற் சாமான்யர் அவர்களடைந்த இகவாழ்வைப் புகழாதவர்களும் உளரோ! அறியேம். நிற்க,சிறிதுநேரஞ்சென்று அத்துவித நிலைகுலைந்து, துவித ஞானமெய்தி ஒருவரையொருவர் நெருங்கியிழிந்து பின்வருமாறு சம்பாஷித்தனர்.

பாஸ்.—டியர்! சென்ற ஆறுமாதமாய் யான் ஊணுறக்கமின்றி வருந்தினேன்.

ச.—கண்ணாள! கடந்த மூன்றுமாதம் நான்கடைசிப்பரிட்சையில் தேறியது எனக்கே ஹாய்ச்சரியமாயுள்ளது.

பாஸ்.—உன்னுடைய தீட்சண்ணிய புத்திக்கு இதைப்போன்ற நூறு பரிட்சைகள் ஒரு பெரிய காரியமோ? யான் லாபரிட்சைதேறியது யாவருக்கும் புதுமையாயிருந்ததே.

ச.—என்னஐயா! கண்ணேறு படுமென்றோ அசத்தியம் எனக்கும் சொல்லத்துணிந்தீர். பாரிஸ்டர் பரிட்சையில் தேறிய பிள்ளைகளில் பாஸ்கரஸ்வாமி முதலியார் பெயர் அதிகௌரவ ஸ்தானத்தில்

படிக்கப்பட்டதென்று நாங்கள் கேள்விப்பட்டோமே,இதுவென்ன படுமோசம்? எங்கேகற்றீர்? சென்னப்பட்டணத்து வித்தையா அல்லது பர்மாதேசத்துக்கற்பனையா!

பாஸ்.—இல்லை கண்ணே, யான் இயற்கையாய்ப் பொய்பேசினபோதிலும் சரஸ்வதி சந்நிதானத்தில் பொய் சொல்லத்துணிவேனோ? யான் சிரமப்பட்டு பரிட்சைக்கு வாசித்ததில்லை யென்பதுண்மை;ஆனால் நான் முதன்மையாய்ப் பரிட்சைகொடுத்தது சரஸ்வதியின் அருட் பிரசாதந்தான் போலும். கலைமாதையாசிரயித்த எனக்குங் குறையுண்டோ.

ச.—நல்லது. மிஸ்டர் (பாஸ்கர)

பா.—ஆ! ஆ! என்ன என்ராஜாத்தி—ரோஜாப்பூ—மிஸ்டர் பாஸ்கரனா?

ச.—பின்னையென்ன ஐயா, மிஸ்ஸஸ் பாஸ்கரஸ்வாமி என்றழைக்கவேண்டுமோ?

பா. சரி. சரி அம்மா! அந்த யோக்கியதைக்கு உன்னூழியன் அருகனோ? அதற்கு உரியவர்கள் தாங்களே.

ச.—என்ன—என்ன— இவ்வளவு சுருக்காகவா !

பாரிஸ்டர்:—தடையென்ன என்கட்டிக்கரும்பே! கற்கண்டே! அமிர்தமொழியாய் ! என்றுசொல்லிக்கொண்டே, அன்புக்குரியாளைப் பலமுறைதழுவி, "என்னுயிராவாய் நம்முடைய விவாக மஹோத்ஸவம் எப்போது நடப்பிக்க உத்தேசித்திருக்கின்றாய்?" என்று வினயத்துடன் விசாரித்தார்.

ச.—பொறுமையா, பொறும். ஆக்கப்பொறுத்தவர் ஆறப்பொறுக்கப் போகாதா. சிறுபிள்ளை விளையாட்டாய்ப் பேசுகிறீர். கலியாணமென்றால் அவ்வளவுசாமானியமா. உங்கள் புறவடைக்கிள்ளுக்கீரையா? இன்னும் எவ்வளவு கஷ்டங்களை யிடையில் தாண்டிச் செல்லவேண்டியிருக்கிறது. நானோ பங்காளதேசத்து ஸ்திரீ, நீரோ திராவிடத்து வேளாளர் மரபில்வந்தசெல்வம். என்தந்தை பிரமசமாஜத்தைத் தழுவியவர். நானும் ஈஸ்வரபக்தியில் அவரைப்பின் செல்லேனாயினேன். நீரோசித்தாந்தசைவ பஸ்மருத்திராட்சதாரி. என் தாய்தந்தையர் நமதுவிவாகத்திற்கு இசைந்தாலும், உங்கள் மாதா முதலியபந்துக்கள் இந்த நவீன விவாகத்திற்கு என்னென்ன ஆட்சேபம் செய்வார்களோ? மேலும் நான் பங்காளம் சென்றுதான் உமக்கு முடிவுசொல்லவேண்டும். ஆயினும் உம்மையன்றி வேறு புருஷனை மனம்போனாலும் தீண்டேனென்பது சத்தியம். நீர்புறப்படும்புகைக் கப்பிலிலேயே யானும் சுதேசம் சேர சித்தமாயிருக்கிறேனென்று சொல்லிமுடிக்கு முன்னமே-- ஜான்சன்துரையும் து

ரைசானியும், அவ்வறைக்குள் குளிர்ந்தமுகத்துடன் பிரவேசித்து மதனும் ரதியும் போன்று விளங்கிய அன்பன் அன்பியைப்பார்த்து ஆனந்தமடைந்து "ஜகதீஸ்வரன் எல்லாப்பேற்றையும் உங்களுக்கனுகிரகிப்பாராக; உங்களிருவர்தாய்தந்தையர்களும்உங்கள்கூட்டுறவிற்கும் பங்காளத்தில் இனி நடக்கப்போகும் உங்கள் விவாகத்திற்கும் பூரணமனதுடன் விடைகொடுத்திருக்கின்றார்கள். போஜனத்திற்கெழுந்திருங்கள், லண்டன்டவரைப்பார்த்துவர வண்டிகளுக்குத் திரவுசெய்திருக்கிறேன். குறித்தகாலத்துட் சென்றால்தான் நாம் சாவகாசமாய் இவ்விடம் திரும்பிவந்து மாலையில் நாடகம்பார்க்கப்போகக்கூடு" மென்று கூறி அன்பிலொன்று பட்டகாதலன் காத இருவரையும் அழைத்துச் சென்றார்கள்.

வி. முத்துக்குமாரசாமி.

LADIES' PAGES.

மாதர்க் கிதமான பக்கங்கள்.

MOTHERS-IN-LAW ON MODERN CIVILIZATION.

"மாமிகளும் தற்கால நாகரீகமும்."

சேஷியம்மாள் ;—[எதிர் வீட்டு வாசலில் நிற்கிற நாராயணி யம்மாளை பார்த்து] என்ன நாணி! காரியமாச்சோ, இங்கே வாயேன்? உனக்கென்னம்மா உன் நாட்டுப் பெண் இருக்காள் யெல்லாத்தையும் பார்த்துக் கொள்வள்.

நாணி:—ஆமாண்டி, அவ்வளவு வரிசை யுண்டானால் நீ இப்படிச் சொல்வாயோ ?

சேஷி;—யேண்டி உன் மாட்டுப்பெண் ரத்தினம் நல்ல புத்திசாலி, பம்பரமாட்டி விட்டமாதிரி காரியம் செய்வாளே !

நாணி;—அவள்தானே! விடியற்கால மெழுந்திருந்து பல்தேய்த்து குழந்தைகளுக்குப் பின்னிப் பொட்டிடுவளம்மா. உடனே ஸ்நாநம்பண்ணிப் போட்டு யெல்லாருங் காப்பியாமே யிப்போன்று புதிசா, அது குடிப்பார்கள்; இரண்டு குழந்தைகளையும் பள்ளிக்கூடத்திற் கனுப்பிவிட்டு அவள் ஆம்பிடையானோடே மச்சிலில் வாசித்துக்கொண்டிருப்பாள்.

சேஷி;—என்ன வாசிப்பு ?

நாணி;—அதேன் சொல்லச் சொல்லறாய் ? யென் பிள்ளை, நூறு ரூபாய் சம்பாதிக்கிறேனே, பரிசாரகன் நேமிக்கிறேனென்கிறான். எனக்கு மனசர்க்கவில்லை. பின்னே சமை யெங்கறான்.

சேஷி;—அப்பரம் மத்தியான்னம் சாப்பிடத்தானிரங்குவார்களோ ?

நாணி;—ஆமாம்! ஆம்பிடையானுக்கு சாதத்தைப் போட்டு உடுப்பெடுத்துக்கொடுத்து கச்சேரிக்கனுப்புவள். உடனே குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்துவரும். அதுகளுக்கும் போட்டு னேக்கும்போட்டு தானுஞ் சாப்பிடுவாள்.

நாணி,—நீதான் பாத்திரங்களையும் தேக்கணுமோ ?

சேஷி;—நாமாட்டேன்; வேலைக்காரி வருவள். தேய்ப்பள். இவள் இருந்து பாசி கோர்ப்பள். ரவிக்கை தைப்பள். அடுத்தாத்துப் பெண்கள் வந்து பாட்டுச் சொல்லிக்கும். யிதொன்னும் யெனக்குப் பிடியாது.

சேஷி;—(தீப்பிடித்த வீட்டுக்கு மேல்காற்றைப் போல்) நம்ப காலத்திலே யிதொன்னுங் கிடையாதம்மா !

நாணி;—இன்னங்கேளு; குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வரும். அதுகள் கிட்டே பள்ளிக்கூடத்தில் நடந்ததெல்லாங் கேட்டு வம்பளப்பள். இதுக்குள்ளே அவன் கச்சேரியிலிருந்து வந்து விடுவன், அவன் கூட கச்சேரி வம்பெல்லாமளப்பள்.

சேஷி;—அதற்குள்ளே யிருட்டிடும்.

நாணி;—ராத்திரி சமயல் வேறே. யெல்லாருஞ் சாப்பிட்டு விட்டு இரண்டு நாழிகை குழந்தைகளுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கிறேண்டா பேர் வழின்னு சொல்லிக்கொடுப்பார்கள். அப்பரம் ,பியானுவாம் அதென்னவோ வாச்சு ஒரு நாழிகை பாடுவள்.

சேஷி;—யெல்லாங்கலிகால கூத்துத்தாம்போ.!

நாணி;—இப்போ யெல்லாமப்படித்தானே யிருக்கும யெம் பொண்ணோடு பொண் பேத்தி மீனாக்ஷியைப்பார். உள்ளே ரத்தினத்தோடு பாசிகொற்கிறாள்.

மீனாக்ஷி;—(இதைக்கேட்டு வெளியேவந்து) ஏன் பாட்டிமாரே! உங்களுக்கிதுதானா அலுவல்? காடுவாவென்கிறது வீடுபோ வென்கிறது. பூமிக்குப்பாரமாயுஞ் சோத்திற்குச் செலவுமாயிருந்துகொண்டு நாகரீகமான நடைகளைப் பழிக்கிறீர்களே.

சேஷி;—இவள் ரத்தினத்திற்கு வக்கீல் போலிருக்கு.

நாணி;—யெல்லாமப்படித்தானின்னேனே.

மீனாக்ஷி;—அப்படி யில்லா விட்டாலெங்களுக்கு கல்வியேது? கொஞ்சம் பொறுமையோடு கேளுங்கள், சொல்லுகிறேன். நீங்கள் கூத்திச்சிகள் மாதிரி முட்டுக்கு மேல் துணிகட்டிக் கொண்டு இரவிக்கை யென்பதைப்பார்த்திராமல் மிருகங்களிலும் கேவலமாயிருந்தீர்கள். உங்கள் புருஷர்களோ உங்களைவிட வேஷ்டியைத்தூக்கிக் கட்டிக்கொண்டு உடுப்புக்குப்பதில் சாவிபூதி பூசிச்

கொண்டு உங்களை கிட்டவரவொட்டாமல் ஓடி யொளியச் செய்து கொண்டிருந்தார்கள். எங்கள் புருஷர்களோ நாசிகை பரியந்தம் பூட்ஸு, ஸாக்ஸு, கால்சட்டை கைச்சட்டை தலைக்குட்டை தரித்துக்கொண்டு நாங்கள் செய்கிற கழுத்துப்பட்டைபாசி கோத்த பிரம்புகளை விரும்புகிருர்கள். இன்னும் ஐரோப்பியர் லேடி சகிதமிருக்கிறதைப் பார்க்கப்பார்க்க எங்களை விட்டுப்பிரிய மாட்டேனென்கிருர்கள். அப்படியே நாங்களும் நடக்கவேண்டும். இப்பொழுதோ விலைமாதர்கள் ஜாஸ்தியானபடியால் யெங்கே யெங்கள் நாயகர்களின் மனதைக் கவர்ந்து விடுவார்களோ வென்று பயந்து அவர்களுக்குப் பதின்மடங்காய் எங்கள் நாயகர்களை ரஞ்சிக்கச் செய்கிறோம். இக்காலத்து சங்கதிகள் உங்களுக்கென்ன தெரியும்?

சேஷி;—இதெல்லாம் ரத்தினத்தின் சிட்சையே?

மீனாக்ஷி;—ஏன்! ரத்தினம் உங்கள் வம்பர் மகா சபை குருவைப்போலில்லையோ?

சேஷி;—நான் தூஷிக்கலை. மாமியாருக்குக் காரியம் செய்ய வேண்டாபோ?

மீனாக்ஷி;—பணக்காரர்கள் பரிசாரகன் போட்டுத்தான் சமைக்கச் சொல்லுவார்கள். எங்கள் பாட்டிக்கு கொழுப்பு. சால்ட் சப் இன்ஸ்பெக்டர் சம்சாரத்தைப்பார். ஏழையானதால் சமைத்துக்கொள்ளவுஞ் செய்கிருள் படிக்கவுஞ் செய்கிருள். நாங்கள் எவ்வளவு செட்டாயிருக்க வேண்டுமோ அப்படித்தானிருக்கிறோம். எங்கள் மாமா நாணிப்பாட்டியோடு சண்டை பிடித்தால் ரத்தினம் வந்து மாமாவின் கோபத்தைத் தணிக்கச்சொல்வி பழயகாலத்து மனுஷியோடு சண்டை பிடியாம லவளிஷ்டப்படி போகச்சொல்லுகிருன். இன்னும் காசு பிரயோஜனமற்ற சீமைத்துணிப் பட்டு முதலியவற்றை வாங்காமல்நாட்டுச் சரக்குகளை வாங்கும்படி யெங்கள் தோழிகளுக் கெல்லாம் சொல்லுவதோடு எப்பேற்பட்ட கஷ்ட காலத்திலும் எவ்வித தூண்டுகோலினுலும் கற்பு நிலை கெடாவண்ணம் பெரியோர்களுடைய சரித்திரத்தை வாசிக்கிறோம். நீங்களும் வம்புக்குப் போகாமல்வந்து கேட்கலாம்.

சேஷி;—அப்படியே ஆகட்டுமம்மா.

SWAYAMVARAM.

சுயம்வரம்.

சுப்பு லக்ஷிமி:—ஏண்டி ரத்தினம்! பத்திரிகைகளிலே பாலிய விவாகத்தைப்பற்றி எழுதியிருக்கே பாத்தையா? அது நல்லதா கெட்டதா?

ரத்தினம்:—என் ? யானையைப்பார்க்க வெள்ளெழுத்தா ? பாலிய விவாகத்தைப்போல் கொடூரமானது என்ன இருக்கிறது! "கன்னிகைகள் நல்ல ரூபலாவண்ய சுந்தர புருஷனை யடைய விரும்புவார்கள். தாயார் ஐசுரியவானை விரும்புவாள். பிதா புகழச்சியுள்ளவரை விரும்புவார். பந்துக்கள் நற்குலத்தை விரும்புவார்கள். இதர ஜனங்கள் நல்ல சாப்பாட்டை விரும்புவார்கள். பெண்களை பாலியத்தில் விவாகம் செய்தால் அவர்க ளாசைக்கிசைந்த நாயகனன்றி மாதா பிதா முதலிய மற்றவர்களி னபிப்பிராயத்திற்கிசைந்த குருடு, செவிடு, பயித்தியம், முடம், கிழவி, ஊமை, ரோகம், வீர்மூடம், முதலிய குணங்கள் வாய்ந்த லக்ஷண புருஷர்களை கல்யாணம் முடித்து விடுகிறார்கள். "நரிக்கு விளையாட்டு நண்டுக்குப் பிராணாவஸ்தை" பெற்றோர்கள் பிற்காலத்தில் தங்கள் குழந்தைகள் படும் அவஸ்தையைக் கவனிக்காமல் காரியங்களைச் செய்கிறார்கள். பிறகு ஸ்திரீ புருஷர்கள் மனம் வேறுபட்டு படும் அவஸ்தையைச் சொல்ல முடியாது. சாதாரணமாக அடுத்தகத்தைப் பார்த்துக்கொள். பெண்கள் தாங்கள் நேசிக்கும் புருஷர்களை மணம்புரிகிறதா, மணம்புரிந்த புருஷர்களை நேசிக்கிறதா ? எது உத்தமம் ? முந்தியதுதான் உத்தமமென்று எனக்குத் தோன்றுகிறது. அதிருக்கட்டும். அவர்களுடைய குழந்தைகளும் பலமற்றவைகளாய் பிறந்து அற்பாயுளை யடைகின்றன. இக்கொடிய செய்கை நம் தேச சாஸ்திர புராணங்களிற் கிடையாது. இப்பொழுது கட்டாயம் இதற்கொரு முடிவு உண்டாக வேண்டும்.

சுப்புலக்ஷிமி:—மின்னெல்லாம் கிடையா தின்னாயிப்போ எல்லாரும் அப்படிச் செய்வானே ?

ரத்தினம்:—நம்தேசத்தை மகம்மதியர் அரசுபுரிந்த காலத்தில் நமது பெண்களை அவர்கள் அடிக்கடி தூக்கிச்சென்றுமணம்புரிந்தனர். ஆனதினால் அவர்கள் விவாகமான ஸ்திரிகளைக் கொண்டுபோவதில்லை. பக்குவமான பெண்கள் கல்யாணமாகாதிருந்தால் அவர்களைத் தூக்கிச் செல்லுவார்களென்னும் பயத்தினால் தாய்தந்தையர்கள் பாலியத்திலேயே தங்களுக்கிஷ்டப்படி தங்கள் குழந்தைகளுக்கு விவாகம் புரிவித்தனர். இவ்விதமாக யிக்கொடிய வழக்கம் ஏற்பட்டது. சிலபெண்கள் கல்யாணம் ஆன சில தினங்களுக்கெல்லாம் புருஷனையிழந்து பக்குவவதியானவுடன் தங்கள் விதியையும் பெற்றோர்களின் கொடுமையையும் நினைத்து தன் ஜீவகால முழுவதும் படும் கஷ்டம் சொல்லி முடியுமா? இப்போது அவ்விதப் பயங்களுக்கிடமில்லை. இப்போது நம்மை யாள்பவர் மகம்மதியரல்ல, ஆங்கிலேயர் ஆள்கிறார்கள். ஆகையாலந்த வழக்கமின்னும் என்னத்திற்கு?

சுப்பு;—அப்படின்னா இந்த வழக்கத்தைத்தழுவி முன் வழக்கத்தை எப்படிகொண்டுவரது?

ரத்தினம்:— முற்காலத்தில் கன்னிகைகள் பக்குவவதியானபின் தங்கள் மனதிற்கு இசைந்த புருஷர்களைத் தெரிந்தெடுத்துப் பெற்றோர்களினனுமதி பெற்று விவாகஞ்செய்து கொண்டு சுகமாய் வாழ்ந்தனர். சகுந்தலை, சீதை, தமயந்தி, திரௌபதி, முதலியவர் எவ்விதம் மணம்புரிந்தனர்? இவர்கள் மணம்புரிந்த வழக்கத்திற்கு "சுயம் வரம்" என்று பெயர். இவ்வித மணம் செய்த ஸ்திரீகள் தங்களுக்கு மிக்க கஷ்டங்கள் நேரிட்டபொழுதும் தங்கள் பதிவிரதா தர்மத்திற்கு பங்கம் நேரிடாமல் நடந்துவந்திருக்கின்றனர். அதேமாதிரி நாமும் நம்மிஷ்டப்படி நாயகனைத்தேடிக் கொள்ள வேண்டும். ஆனா

விதற்கு நம்பெற்றோர்கள் குறுக்க நிற்பார்கள். இப்பொழுது பரோடாவில் பெண்களுக்கு 12 வயதிற்குமேலும் பிள்ளைகளுக்கு 16 வயதிற்குமேலுந்தான் கலியாணம் செய்ய வேண்டுமென்ற விதியேற்பட்டிருக்கிறது. அவ்விதமே நம் ராஜாங்கத்தாரும் நம்மீது கிருபைகூர்ந்து இதைப் போன்ற ஒரு விதியேற்படுத்திவிட்டால் பின்னர் பெற்றோர்கள் நம்மிடம் சண்டைக்குவரமாட்டார்கள்.

சுப்பு:— ஆனல் 12 வயசுக்கு மேலே பெண்கள் கல்யாணம் பண்ணிக்லாமா?

ரத்தினம்:—நான் அப்படிச்சொல்லவில்லை. இது மிக்கக்குறைதான். பெண்கள் 16 வயதிற்குமேலும் புருஷர்கள் 20 வயதிற்கு மேலும் மணம்புரிவது சாதாரணம். பெண்கள் 20 வயதிற்கு மேலும்புருஷர்கள் 24 வயதிற்குமேலும் மணம் புரிவதே உத்தமம்.

சுப்புலக்ஷ்மி:— நீ சொல்லும் தமயந்தி, சீதைமுதலியவர்களெல்லாம் புராணங்களிலே ஏற்பட்டவர்கள். இப்போ யாராயினும் தனக்கிஷ்டமான புருஷனை மணந்து கஷ்டங்களுண்டான பொழுது பிரயந்தவருமலிருந்திருக்ருர்களா?

ரத்தினம்:—ஏன்? மகமதியர் அரசாண்ட காலத்தில்அதாவது1803-ம் வருஷத்தில் அல்லாவுடீன் சித்தூரரசனுடைய பெண்சாதி பத்மினியை யடையவிரும்பி அவ்வூரின்மீது படையெடுத்துஜெயிக்கமுடியாது கடைசியாய் அம்மாதின் பிரதிபிம்பத்தை கண்ணாடியிலாவது காட்டினல் திரும்பி விடுகிறேனென்று சொல்ல, அவ்விதமாகவே பார்த்துப் பிறகு சித்தூரரசன் அம்மகமதிய அரசனை வழியனுப்பக் கொஞ்சதூரமவர் பின்தொடர்ந்தனர். அப்பொழுது அல்லாவிடீன் உடனே யவரை சிறையிட்டு பத்மினியை கொடுத்தாலொழிய அவரை விடமாட்டேனென்றனர். இதை பத்மினி யறிந்து அவரை மணம்புரிய சம்மதித்து 700 சகிகளுடன் பல்லக்கிற்சென்று தான் புருஷனைப் பார்த்துவர ½ மணி நேரம் கேட்டனள். அல்லாவுடீன் அவளைப் பார்த்ததும் மனமகிழ்ந்து அவ்விதமேகொடுக்க அம்மாது தன் புருஷனிருக்குமிடம் சென்றனள். குறிப்பிட்டநேரம் கழிந்தவுடன் பத்மினி வாராமையைக் கண்டு அவர் சித்தூர் அரசனிருந்த அறைக்குள் போய்ப்பார்க்க அங்கே பத்மினியையும் அவள் புருஷனையும் காணவில்லை. பத்மினியுடன் வந்த சகிகளெல்லாம் யுத்த வீரர்களாய் விட்டார்கள். எவ்வளவு தைரியமான செய்கை பார்த்தாயா?

சுப்பு:—ஆகா! என்னதைரியம்!! புருஷன்மேல் என்ன ஆசை!!! தனக்கிஷ்டமான நாயகனை யடைந்ததால் அல்லவா அவள் இப்படி செய்தாள்? நீயும் நானும் அப்படி செய்வோமா? நமக்கொல்லாம் பர்த்தாவின் பேரிவ்வளவு ஆசை ஏது?

ரத்தினம்:— என்னையுமுன்னுடன் சேர்க்காதே. இப்பொழுது திருவிதாங்கூரில் ரெஸிடெண்டாயிருக்கிற மிஸ்டர் மெக்கன்ஸி அவ்வூர் காலேஜ் பையன்களுக்கு வெகுமதியளிக்கும் பொழுது சொல்லியபடி, "நம் புருஷர்கள் வெளியிலுத்தியோகஞ் செய்யும் பொழுது ஒரு விதமாய் நடக்கிருர்கள். பிறகு வீட்டிற்கு வந்தவுடன் ஒரு விதமாய் நடக்கிருர்கள். நாமும் அவர்களுக்கு இஷ்டமானபடி நடக்கிறதில்லை. அவர்களுக்கு வேண்டியவைகளையறிந்து அவர்களிஷ்டப்படி நடக்கவேண்டும். அதற்கு நாம் இன்னும் கற்கவேண்டும். தற்காலத்திலிருக்கிறபடி கல்யாணமும் சாந்திகல்யாணமும் வேருயிராமல்ஒன்ருயிருக்கவேண்டும். அப்பொழுதுதான் மிகநன்மையுண்டு.

(368-வது பக்கத்தொடர்ச்சி.)

தேனீ (Bees.) பூச்சியி லெல்லாம் அற்புதமானவைதேனீக்களே. இவற்றின் விடாமுயற்சியும், தேசாபிமானமும், பரோபகாரமும் பாவலர்களாற் பலமுறையும் பாடப்பெற்றவை. குழாமொன்றில் ஓர் அரசியும் (Queen) பல புருஷர்களும் (Drones) அனேக அலிகளுமுண்டு. அலிகளிரண்டு விதம்: சிலர் மெழுகு செய்பவர்கள், சிலர் செவிலித்தாய்கள் (Nurses). தன்னிஷ்டப்படி அரசி ஆண்முட்டை, பெண்முட்டை, அலிமுட்டை யென வெவ்வேறுவித முட்டைகளைத் தேனீக்களின் வெவ்வேறு அறைகளிலிடும். தற்செயலாய் அரசி இறந்து போனாலும்? காணாமற்போனாலும், செவிலித்தாய்கள் அலிமுட்டையி லொன்றை எடுத்து ராஜக்கூடத்தில் வைத்து மற்றகுஞ்சுகளுக்குக் கொடுப்பதினு மதிகம்தீனிகொடுத்து பாதுகாத்துவர, இந்தமுட்டையினின்று அலிவெளிப்படாது அரசியே வெளிப்போம். இன்னும் அலியைப்பெண்ணாக மாற்றுஞ் சக்திப் பிரமனிடத்து முளதோ என்னு மையம் எமக்குண்டு. முட்டையினின்று அரசிவெளிவரப்பதினாறு நாளும், அலிவெளிவர இருபது நாளும், ஆண் வெளிவர இருபத்துநான்கு நாளுஞ் செல்லும். பெண்முட்டைகளினின்றும் முதலில் வெளிப்போகுமரசி, மற்றையபெண்முட்டைகளை ஒவ்வொன்றாய்த்தேடிப்பிடித்து நாசஞ்செய்யும். என்ன பொறாமை! ஓரேசமயத்து மூன்றுநான்குபெண்தேனீக்கள் வெளிப்போந்தால், இவை ஒன்றோடொன்று போர்புரியும். ஒன்றுமட்டுமே மற்றவற்றைக்கொன்று ஜயங்கொள்ள, அதுவேகூட்டிற்கு இராணியாகும். அரசாளும் நங்கை இறந்துபட்டாள் அல்லது கொல்லப்பட்டாளென்னுஞ் செய்தி கூட்டிற் பரவினதும், ஆங்குண்டாம் அமளிக்கு அளவில்லை. குஞ்சைப் பாதுகாக்கும்அலிகள் அங்மிங்குஓடும்;சத்தமதிகப்படுத்தும்;இரண்டு மூன்றுமணிநரம் இழவுகொண்டாடும். அத்தருணத்து வேறோர் கூட்டினின்று ஓரரசி வந்தால், அதற்குத்தக்க மரியாதை செய்து அழைத்துப்போய் ஆசனத்திருத்தும். அன்றேல், சில அலிமுட்டைகளிலொன்றை எடுத்து அதனின்றும் இராணி வெளிவருவதற்கேற்ற சாக்கிரதைகளைச்செய்யும். விளையாட்டாகக் கூட்டினின்றும் அரசியைச் சற்றுநேரம் எடுத்துவைத்திருந்து பிறகு கூட்டில் விட்டால் அவளை நன்றாய்ப் பரீட்சைசெய்து தங்களிராணி யென்றுகண்டு அடிபணிந்து சிம்மாசனம் எற்றுவிக்கும். அலிகள் அரசிக்குச்செய்யும் பணிவிடைகள் பலவுண்டு. அடிக்கடி அவளைச்சுத்தி செய்யும்; தேன் உபசரிக்கும்; அவளைச்சுற்றிகாத்திருந்து அவளது ஆணை மேற்கொண்டொழுகும். கருக்கொண்டகாலத்து இதனினு மதிக உபசரணை நடத்தும். நாமும் கருப்பிணிகட்கு மிக்கஉபசாரஞ் செய்வது இவற்றினிடமே கற்றோம்போலும்!

ஆண்தேனீ பெண்ணோடு புணர்ந்ததும் ஆணெறும்புபோல் உயிர்நீக்கும். அலிகள் மெழுகினாற் கூடுகட்டும்; பற்பல புஷ்பங்களி னின்றுந் தமது நீண்டநாவினாற் தேனை எடுத்து உக்கிராணத்திற் சேர்க்கும். இவ்

வாறு பூவிலிருந்து அமிர்தத்தைக் கொள்ளையாடுமிவர் சோரரன்றே? அன்று;சோரரென்று சொல்வது அடாதகாரியம். இவை பலபுஷ்பங்களின்மேலுட்காருவதினுற் செடிகட்குண்டாம் பலன் அளவிடக்கூடியதன்று. இவ்விதம் மலர்களை ஸ்பரிசிக்காதபக்ஷத்தில் நமக்குக்காயும் பழமும் விதையுங் கிடைப்பதரிது. தேனீக்கள் பூமேலுட்காருங்கால் இவற்றி னுடம்பின் மேலும் இறகின்மேலும் மகரந்தமென்று சொல்லப்பட்ட பூவின்தாது (Pollen) ஒட்டிக்கொள்ளும். மகரந்தப் பொடியைப் பூசிக்கொண்டு தேனீ மற்றோர் பூவி லுட்கார, அப்பூவிலுள்ள முட்டையோடு (anther) மகரந்தத்தூள் கலக்கும். இவ்வண்ணம் ஆண் தாதுவும் (Pollen) பெண்தாதுவும் (anther) சேர்ந்த பிறகுதான் காயென்றும் பழமென்றும் விதை யென்றுமுண்டாகும். இப்பரோபகாரத்திற் காகவே தேனீக்களுக்கு நாம்மிகவுங் கடமைப்பட்டிருக்கிறோம்.

தற்போது பிறந்ததேனீயும் யாராலுஞ் சொல்லப்படாமல் தன்னுடைய கருமங்களை இன்னின்ன வென்றறிந்து அவற்றைச் சந்தோஷமாய்ச் செய்யுங்கால் தனக்காகமட்டும் இவ்வுலகத்தில் ஜன்ம மெடுக்கவில்லை பிறருக்கும் பயன்படுமாறு அனுப்பப் பட்டிருக்கிறே மென்னு முயர்ந்த உண்மையை அறிந்து செய்வன திருந்தச் செய்யும். இவ்வரியபெரிய விஷயத்தைப் பீடத்தின் மீதேறி உபன்னியாச மொன்றே செய்து காலங்கழிக்கும் நம்பெரியோர்களிற் சிலரேனுந் தெரிந்து கொள்வரேல் நமது தேசத்திற்கு நற்காலம் பிறந்த தென்று திண்ணமாய்ச் சொல்லலாம்.

கூடுகளிற் கூட்டங் கூட்டமாய்த்தேனீக்கள் வசிப்பதனுல் கரியமிலவாயு கூட்டி லடிக்கடி நிறைந்து போம். அக்காலத்துச் சில தேனீக்கள் வாசற்படியில் நின்று தமது இறகை ஒருவிதமா யடிக்கக் கரியமிலவாயு சிறிது சிறிதாய் வெளிப்போக நல்லகாற்றுமற்றொரு பக்கமாய் உள்நுழையும். இதைப்பற்றி ஐயமுறுவோர் தாமேகண்டு சந்தேகம் நீக்கல்வேண்டும். தேனீபோற் பரிசுத்தப் பிராணி வேறுண்டோ? குப்பைகூளத்தையும் குஞ்சுகளாலெறியப்பட்ட சட்டைகளையு முடனுக்குடனே அப்புறப்படுத்தும்.

இனி இப்பூச்சிகள் வசிக்கும் வீடு அமைக்கப்படுவதைப்பற்றிச் சில சொல்லுவோம்.

துளவிகள் குஞ்சுகளை வைத்துக் காப்பதற்காகவே மண்ணினுலாவது மெழுகினுலாவது அல்லது மண், மெழுகு, காகிதத்துண்டு முதலிய வற்றினுலாவது கூடுகட்டும். குஞ்சுகள் வெளிப் போந்ததும் இக்கூடுகளை யுபயோகிப்பதில்லை. ஆனுல் எறும்பும், தேனீயும், கரையானும், பெரியகூடுகள் கட்டி அவற்றில் வருஷம் முந்நூற்றறுபது நாளும்வாழும்.

எறும்புப் புற்றுகள் சிறுகுன்றுருவங் கொண்டிருக்கும். உள் நுழைந்து பார்த்தால் அநேகசிறு அறைகளும் அறைகட் கிடையிடையே அழகிய பாதைகளும் பாதைகள் பலசேர்ந்த ரோட்டுகளும் அமையப்பெற்றிருக்கும். இன்னுஞ் சிலபுற்றுகளில் கட்டிடத்திற்கு மேற்கட்டிடமாக நாற்பது மாடங்கள் அமைந்து ஒவ்வொன்றிற்கும் ஏறவும் மிறங்கவும் வழிகள் உண்டு. வெயிற்காலங்களிலும் பகல்வேளையிலும் முட்டைகளை மேன்மாடங்களில் வைத்திருக்கும். குளிர் மழைக்காலங்களில் அவற்றைமறுபடியும் பாதாள மாடங்களிற் சேர்க்கும். இங்ஙனஞ் செய்வதின் காரணம் எளிதிற் புலப்படும். பகல்வேளையிற் சூரிய வுஷ்ணத்தால் முட்டைகட்கு நன்மையுண்டாகும். இராக்காலத்தில் தரை சீக்கிரங் குளிர்ந்து போமாதலாலும் தரைமட்டத்திற்குப் பூமி உஷ்ணமாயிருக்குமாதலாலும் முட்டைகளை இரவில் கீழ்மாடங்களிலிருத்தும்.

சிலஜாதி எறும்புகள் பற்களால் ஓபாது வேலைசெய்து மரங்களில் கூடு கட்டும். அங்கும் பலமாடங்களுண்டு. ஒன்றின் கீழொன்றாய் அனேகமரத்தூண்களை நிறுத்திக் கட்டிட முழுவதையுந்தாங்கவைக்கும். இன்னுஞ்சில மரத்தூளினால் வீடுகட்டுகின்றன. இவைகற்றச்சன், மரத்தச்சன் தொழில்களை நன்றாயறிந்தன போலும்.

இவ்வுலக வின்பமுழுதும் ஒருங்கே நீத்த தத்துவ சாஸ்திரியும் தேனீக்கூட்டின் உட்புறத்தைக் கண்டால் ஆச்சரியமடைந்து பெருமூச் செறிவான். தேனீக்கூடு ஒவ்வொன்றுமோர் சிறுபட்டினமாம். அநேக ரோடுகளும், ரோட்டுக்கிருபுறம் வீடுகளும், போஷணச் சாலைகளும், ராஜஅரண்மனைகளும்மெழுகினாலமைக்கப்பட்டிருக்கும். தேனீக்கள்கட்டும் அறைகளெல்லாம்அறுகோணமுடையன. ஏன் அவ்வுருக்கொண்ட வீடுகளைக் கட்டவேண்டும்? என்றால் மெழுகு அபரிமிதமாகத்தாமே உண்டாக்கத்தக்க வஸ்துவன்று. அது சிறதுசிறிதாகவே உண்டாகின்றதினால், அதைக்கொஞ்சங் கொஞ்சமா யுபயோகித்துப் பெரியதேனடை கட்டவேண்டும். சதுரமான அறைகளைக் கட்டினால் அவற்றின்வழி தேனீக்களின் உருண்டவுடம்பு செல்லாது. செல்லும் வண்ணம்பெரிதாகவமைத்தால் வீணில்இடமும் மெழுகும் செலவாய்விடும். தேனீயினுடம்பு உருண்டையா யிருப்பதினால் ஏன் வட்டமான வீடுகளைக் கட்டலாகாது? இந்தவிதங்கட்டினால் மூன்று நான்கு அறைகட்கிடையில் பயனில்லாச் சிறுதுளைகள் தங்கிப்போம்; அவற்றை மெழுகினா லடைத்தல் வேண்டும். ஆகையாலித்தகைய கஷ்டங்களை முன்னோக்கி அறுகோண வீடுகளையே அமைக்கின்றன. இவ்விஷயங் கணிதநூல் வல்லார் நன்கறிவர். அவரையுந்தலை குனியச் செய்வனவோ இத்தேனீக்கள் !

கரையான் தரைமட்டத்திற்குக் கீழும் மேலுமாய்த் தமது பட்டினத்தையுண்டாக்கும். ஒவ்வொரு பட்டினமும் அனேககஜ நீளவகலமுள்ளதாய், மாடமாளிகை கூட கோபுரங்கள் பெற்றதாய் விளங்கும். இவற்றின் பட்டினத்து

க்கோபுரங்களே அனேக அடி உயரந் தரை மட்டத்திற்குமேற்சிறிதும்பெரிது மாகத் தோன்றும். காற்றுமழை முதலியவற்ருல் அடிபடுவதனுலும், தற்செய லாய் அபாய நேரிட்டால் முதலிலுடையப் படுவன இவையே ஆதலாலும் இக்கோபுரங்களில் ஒருவரும் வசிப்பதில்லை. கட்டிடத்தின் நடுமத்தியில் சக் கிரவர்த்தியின் அரண்மனையும், அதைச்சுற்றி ஏறக்குறைய ஓரடி சுற்றளவுக்கு அநேக கூடங்களுமுண்டு. இக்கூடங்களிற்ருன், அரசி ஆணையை எதிர்பார் த்துப் படைவீரரும் மெய்காப்பாளரும் சுறுசுறுப்பாய் அங்குமிங்கும் ஓய்வின் றி ஓடிக்கொண்டிருப்பார்கள். இக்கூடங்களுக்கு வெளியில் ஊழியக்காரர்க ளின் வீடுகளாம். ராஜமாடங்கள் உச்சியில் வளைந்து ஆங்கிலத்தில் "காதிக்" (Gothic) என்று சொல்லப்பட்ட கட்டிடங்களின் உருவங்கொண்டவையு ண்டு.

வீடுகட் கிடையில் சிறுபாதைகளும் ஓரடி அகலமுள்ள பெரும்பாதைக ளும் அநேகமுண்டு. இப்பாதைகள் கூட்டிற் சுடியிலாரம்பித்து உயர்ந்து உயர்ந்து சுழன்று சுழன்று கோபுரங்களை எட்டிச் செங்குத்தான பாதைவழி ஏறுவது மிகக்கடினமாதலால் மலையேற நாம் பாதைகள் செய்திருப்பது போல் பாதைகளை அமைக்கின்றன.

உருவிற் பூச்சிகளாயிருந்து செய்யும் வேலைகளனைத்தும் நமக்கு ஆச்சரிய முண்டாக்கு கின்றன. இப்பூச்சிகளின் சுறுசுறுப்பும் விடாமுயற் சியும் தேசாபிமானமும் அன்பும்பரோபகாரமும் இத்துணை யென்றும் இத்த கைத்து என்றும் அளவிட்டுச் சொல்ல நம்மாலாகாது. இவற்றின் குணத் தினுந் திறத்தினுங் காற்பங்கை யேனுங் கைக்கொண்டு நாம் காலங் கழித்து வரின் நாமெடுத்த மானுட ஜன்மம் வீணுகாது என்பது திண்ணம்.

V. N. ஐயங்கார்.

PERIODICAL LITERATURE.
நவீனபத்திரிகா வித்தாரமஞ்சரி.

"செந்தமிழ்." இச்செந்தமிழ்ச் சிறந்த பத்திரிகைவழக்கம்போலப் பற்பல விசேடாம்சங்களைக்கொண்டிருந்கின்றது. பத்திராசிரியரது கம்பனைப்படித் தவர்கள் அக்கல்வியாற் பெரியாரை முன்னிலும் பன்மடங்கதிகமாகவே அறிவார்கள் என்பது உறுதி. ஐயங்கார் சுவாமிகள் பற்பல புத்தகவாயிலி லிருந்து எடுத்துக் கம்பன் சரிதத்தைப் படிப்போர் நம்பும் வண்ணமாகவே

எழுதி இருக்கிறார்கள். ஸ்ரீமத். திருமணம் செல்வக்கேசவராயமுதலியாரது "செல்வம்" படிப்போர் போற்றக்கூடிய செல்வமேயாம். இதனால்செல்வத்தை இன்னதென்று செல்வமறியாது கூட்டியோ அல்லது ஊதாரிசெய்தோவருபவர் நன்றாக அறிவார்கள். பழஞ்சூத்திர மேற்கோள்களோடு மூதுரைகள் பலவற்றையுங் கூட்டிப்பண்டிதர் மெச்சவும் பாமரர் படித்துப் பயன் துய்க்கவும் எழுதிவரும் முதலியாரது திறத்தைக்கண்டோர் அதிசயாதுவாளா இருப்பார்களா? ஸ்ரீமத் அ. குமாரசாமிப்பிள்ளை தமது காலத்தைச் செந்தமிழினுக்காகத் தர்க்கத்திலே கழியாநிற்கின்றனர். இந்தக் கார்த்திகைமீ பகுதியிலே அன்னோர் வரைந்துள்ள "தோல்வித்தானம்" இதுவரை தமிழில் பிரசுரிக்கப்படாததென்றே நினைத்து அகமகிழ் கின்றோம். இவர் தாம் எழுதிவரும் விஷயங்களால் தர்க்கவிசேடணங்கள் பலதமிழர் பெரும்பாக்கியமாமென்றே கருதாநிற்கின்றோம். "ஓரடித் தமிழ்ச்சொற்கள்" என்ற வியாசமும் பாராட்டற்பாலதே.

மாதர்மனோரஞ்சனியின் டிசம்பர்மாதத்திய பத்திரிகையின் "பெண்கல் விக்குள்ளபிணி"யைக் கண்டு பலர் பீதியடையார்களெனவே நினைக்கின்றோம். ஏனெனில் அது அசலாம்பிகையால் ஆக்கப்பட்டது. இராமாயண சார வினாவிடை படிக்கும் பலர்க்கும்பயன்படத்தகுந்ததே.

இந்தியன்லேடீஸ்மாகஜீன்:—இத்பத்திரிகையின் இம்மாதத்திய சஞ்சிகையிலே அடங்கியுள்ள விஷயங்கள் கொஞ்சநஞ்சமல்ல. 16 விஷயங்கள். பத்தியத்திலே சிலவும் கத்தியத்திலே பலவுமாகக் கல்விகேள்விகளிற் றேர்ந்த மாது நிரூபர்கள் ஐரவர், ஆரியர், மகமதியர், கிறிஸ்தவர்—இவர்களால் எழுதப்பட்டுள்ளவைகள் இச்சிறந்தபத்திரிகையின் சித்திராங்கங்களிலே சித்திரிக்கப்பெற்றவற்றைப் படிப்போர் படித்துப் பயனெய்துவார்கள்.

"**கிறிஸ்டியன்காலேஜ் பத்திரிகை**" யின் டிசம்பர் சஞ்சிகையிலே தென் இந்தியாவின் ஜனங்களால் சாதாரணமாகக் கேட்கப்படும் குறிசாஸ்திரத்தைக்குறித்து எழுதுகிறவர் ஆங்கிலேயம்பயின்றவர்களுக்குச் செவ்வனே எடுத்துக்காட்டுகின்றார். அது பாராட்டற்பாலது.

சென்றமூன்றுவருஷம் வெளிப்படாதிருந்த **மதுவிலக்குத்தூதன்** இப்பொழுது தோன்றியுள்ளது மதுவை விலக்காக்காதவர்களுக்கு ஓர் பெறும் இடையூறாகும். தூதன் அன்னோர் குணக்கேடெல்லாவற்றையும் நன்குஅறிந்து தெளிந்தவன். அதுமட்டுமல்ல. பிறர்க்கு அவற்றை யெடுத்துப் போதிக்கவும் சமர்த்துடையவனாதலால் அவன் ஆதரிக்கப்படுவது அவசியமே. அப்பத்திரிகையிலே இம்மாதத்திய சஞ்சிகையிலே "தமிழ்" என்பதைக் குறித்த ஓர்வியாசமுண்டு. படிக்கக்கடமை பூண்டுள்ளோர் கருத்தை அது என் கவராதிராது?

DEPARTMENTAL NOTES.

பலதுறைக் கலாவிசேடக் குறிப்புகள்.

Medical and Hygienic.—வைத்தியம் சுகாதாரம்.

உணவின் பிரிவுகள்.

நமது உணவை யவக்ஷாரமயம் (Nitrogenous) என்றும் அயவக்ஷரரமயம் (Non-Nitrogenous) என்றும் பிரிப்பதுதான் பிரதானமான பிரிவு. இப்பிரிவுகளில் அடங்கியிருக்கும் விசேஷமான ஆகாரங்களை இவ்விடத்தில் எடுத்துச்சொல்லுவோம்.

1. யவக்ஷாரமயத்தில் பருப்புகள், அரிசி, கோதுமை முதலிய வருக்கங்களும் மாம்சம் முட்டை முதலியவைகளும் அடங்கியிருக்கின்றன.

2. அயவக்ஷாரமயத்தில் நெய், வெண்ணெய், எண்ணெய்,, முதலிய கொழுப்புகள், சர்க்கரை, உப்புமுதலிய பதார்த்தங்கள், நீர், தேயிலைப்பானம் காப்பிப்பானம் முதலிய சிற்றுணவுகள் இவைகள் அடங்கியிருக்கின்றன.

இவ்வாறு இருவகை உணவுகளுக்குள் ஒவ்வொருவனுடைய போஜனத்திலும் பின்சொல்லப்படும் நான்குவிதச் சேர்க்கை தப்பாமல் இருக்கவேண்டுமென்பது சுகசந்தசர்ன சாஸ்திரிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அவை யாவையெனில்,—

(1) யவக்ஷாரங்கலந்த தானியம் அல்லது மாம்சத்தாலாகிய உண்டி (Nitrogenous food. Albuminoid.)

(2) கஞ்சியாவது அல்லது சர்க்கரையாவது கலந்திருத்தல் (Carbo-hydrates)

(3) கொழுப்பு. (Fats)

(4) உப்பு (Salts)

மேற்கூறிய நான்குவிதச் சேர்க்கைகளும் நமது ஆகாரத்தில் இருக்கவேண்டும் என்றும் இவைகளில் ஏதாவது ஒரு சேர்க்கையில்லாவிடினும் அல்லது சேர்ந்திருக்கவேண்டிய முறைக்கு வித்தியாசமாகச் சேர்ந்திருப்பினும் நமது சரீரசுகம் குறைவதுடன் வியாதிகள் சம்பவிக்கும் என்றும் வைத்தியர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஆகையால் நாம்இந்நான்குவிதப் பதார்த்தங்களும் எந்தமுறையிற் சேர்ந்திருக்கவேண்டுமோ அந்தமுறையை விசாரிக்கவேண்டியவர்களாகின்றோம்.

ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொருதினமும் வேண்டிய உணவில்,

யவக்ஷாரம் (Albuminoid)	12	அவுன்ஸ்.
கொழுப்பு (Fat)	4	,,
கஞ்சி அல்லது சர்க்கரை கலந்த உண்டி (Carbo-hydrates)	30	,,
உப்பு	2 அல்லது 3	,,
ஆக ...	48	,,

இந்தப்பிரமாணமானது பிரசித்தவைத்தியர்களாற் சோதிக்கப்பட்டுச் சாதாரணமான ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டிய பிரமாணம் என்பதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

மனிதரின் பற்கள்.

மனிதருக்குள் பற்களோவ்வொன்றுக்கும் ஒன்றுமுதல் மூன்றுவகை வேர்களிருக்கின்றன. அவைகளுக்கென்று ஏற்பட்ட குழிகளில் அவை ஆழ்ந்திருக்கின்றன. இவ்வேர்களும் ஒரு சிரியதுவாரமும் அதன்வழியாய்ப் பற்களை சாகவிடாமல் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு ஒரு சிறிய இரத்தக்குழாயும் ஒரு நரம்பும் இருக்கின்றன. பற்களின் முனையில் இனுமல் (Enamel) என்ற ஒருபொருளிருக்கின்றது. இதுவே உலகிலுள்ள யெல்லாப் பொருள்களிலும் கெட்டியான பொருளெனக் கூறப்படும். முன்பற்களில் நான்குமாத்திரம் உளிமாதிரி தட்டையாயிருக்கின்றன. கெட்டியானபதார்த்தங்களை வெட்ட இவைகளே உபயோகப்படுகின்றன. இந்தப்பற்களுக்கு அடுத்தாப்போலிருக்கும் பல் நீண்டு நாய்ப்பல்லைப்போலிருக்கும். ஆனதுபற்றியே இதற்கு நாய்ப்பல்லெனப் பெயர். அதற்கு அப்புறம் இரண்டு தலையுடையனவாய் காணப்படு மிரண்டு பற்களுக்கு இரண்டு வேர்களிருக்கின்றன. அதற்கப்புறம் மூன்றுபற்கள் கெட்டியாய் மூன்று நான்குதலைகளையும் மூன்றுவேர்களையும் உடையனவாயும் உண்ணும் கெட்டிப் பதார்த்தங்களை அறைத்தற்கு இயன்றனவாயுமிருக்கின்றன. குழந்தைப் பருவத்தில் இரண்டாவது வயதுமுதல் பற்கள் வளர ஆரம்பிக்கின்றன. 6. 7. 8. பிராயத்துக்குள் முளைக்கும் 20-பற்கள் எல்லாம் மேற்கூறிய அந்த வயதிற்குள்ளேயே விழுந்து பின்பு ஸ்திரமான பற்கள் முளைத்து விற்கும். 13 - பிராயத்துக்குள் 28 பற்கள் முளைக்கின்றன. கடைப்பல் நான்குமாத்திரம் 25 அல்லது 28 பிராயம் வரையில் கிளம்புகிறதில்லை. இந்தப்பிராயத்தில் மனிதனுக்கு மனம், புத்தி, அறிவு முதலான ஞானங்கள் முதிர்வதினுல் அப்போது முளைக்கும் இந்நான்கு பற்களையும் ஞானப் பற்களெனக் (Wisdom Teeth) கூறப்படும். இது இங்கிலீஷ் வைத்திய சாஸ்திரங்களில் ஒருவன் வயதை தீர்மானிப்பதற்கு முக்கிய பிரமாணமெனக் கூறப்பட்டுள்ளது.

Educational.—கல்வி.

கப்பலில் பள்ளிக்கூடம்.

இந்தியாவிலுள்ள பள்ளிக்கூடச்சிறுவர்கள் தங்கள் வீட்டையும் பள்ளிக்கூடத்தையும் தவிர வேறிடங்களை யறிந்திரார்களென்பது யாவரும் அறிந்த விஷயமே. பள்ளிக்கூடத்தில் கற்கவேண்டியவைகளைக் கற்று பரீக்ஷைகளில் தேறியபின்னர் உத்தியோகம் சம்பாதிக்க முயல்வதும் யாவருக்கும் தெரிந்த விஷயமே. மேல்நாடுகளிலோ நல்ல படிப்புள்ளவர்கள் தேசம்விட்டுத் தேசம் சுற்றுப்பிரயாணம்செய்து தங்களுடைய புத்தக அறிவைப் பலப்படுத்திக்கொள்ளுகிறது வழக்கமாயிருக்கிற தென்பது எமது துணிபு. அதற்குத் திருஷ்டாந்தமாக தற்சமயம் அமேரிக்கா நாட்டுச்சிறுவர்கள் ஒருபக்கவில் ஏற்றப்பட்டு நாடு நாடாய்க் கொண்டுபோகப்படுகிருர்கள். அவர்களுக்கு அவர்கள் ஏறிச் செல்லும் கப்பலே கலாசாலையாயிருக்கிறது. இப்பள்ளிச்சிறுவர்களை ஏற்றிச்செல்லும் "நியூஅமேரிக்கா" வென்னும் கப்பல் இந்தியாவிற்கும் வரப்போகிறது. இக்குழந்தைகள் யாவரும் 14 வயதிற்

கு மேற்பட்டவர்களாயும் 19 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களாயு மிருக்கிறார்கள் இவர்களுக்குப் பாடம் கற்பிக்க அந்தக் கப்பலில் 25 போதகாசிரியர்கள் இவர்கள் கூடவே கப்பலில் வருகிறார்கள். இவர்களுக்கு உயர்தரப் படிப்பும் பலதேச வர்த்தகப்படிப்பும் கற்பிக்கப்படுகின்றன. இவர்கள் இவ்வாறு 4-வருஷகாலம் தேசசஞ்சாரம் செய்து கல்வியில் தேர்ந்து அமேரிக்கா செல்வார்கள்போலும். இந்தக் கப்பல் சென்ற அக்டோபர்மாதம் அமேரிக்காவை விட்டுப் புறப்பட்டதாம். மூன்றாவது வருஷம் இந்தக்கப்பல் பம்பாய் கல்கத்தாமுதலிய முக்கிய நகர்கட்கு வரும். இதல்லவோ கல்வி கற்கும் முறைமை. நமது இந்திய சிறுவர்களையும் இவ்வாறான கல்வியிற் பயில விடுத்தாலல்லவோ இந்தியாவிற்கு க்ஷேமமுண்டாகும், ஜனங்கள் நற்கெதியடைவார்கள்.

RECENT TAMIL PUBLICATIONS.
நூதன தமிழ்ப் பிரசுரங்கள்.

தமிழ்.

சென்னை பச்சையப்பன் கல்லூரித்தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தும் மிஸ்டர். T. செல்வகேசவராயமுதலியார் தமிழையும் தமிழரையும்பற்றி எழுதி வெளியிட்டிருக்கும் ஒரு சிறு தமிழ் நூலின் தலைப்பெயர் **தமிழ்** என்பது. இது 128-பக்கங்கொண்டது. ஆசிரியர் இந்நூலில் தமிழானது வடமொழிக்குத்தலை மகனென்றும், தமிழரும் ஆரியருடைய நாற்பால் மூலத்திற் கீழ்ப்பாற்குலத்தரென்றும் காரணம் காட்டாது கண்மூடிக் கழருகின்றவர்களுடைய கோட்பாடுகளை வெட்டிப் பேசி, தமிழ் மிக்க சொல்வலிமையும் வடமொழிக்கு முற்றும் புறம்பான இலக்கிய வகையும் இலக்கணவமைதியும் உடைய தனி மொழியே என்றும் பலவகை உதாரணங்களால் சித்தாந்தம் செய்திருக்கின்றார். மேலும், "என்ன ஐயா! தமிழ், தமிழ் எனப்பெருமலைவு செய்யாநின்றீர்? உங்கட்கு வடமொழியைத் தழுவாத இலக்கியங்கள் உண்டா? பாரகாவியங்கள் உண்டா? நாடகம்சங்கீதம் உண்டா? தர்க்கம், வேதாந்தம் முதலான சாஸ்திரங்கள் உண்டா? உங்கள் தமிழைக் கட்டிவையுங்கள். எல்லாம் நாங்கள் சப்பியுமிழ்ந்த சக்கைதானே" எனக்கூறிப் பெருமிதமெய்துகின்ற தமிழ் மொழியின் தொன்மையுணராத வடமொழிவலவர் சிலரின் கூற்றை எதிர்த்து இயன்றன கூறித் தனித்தமிட்கே உரிய நூல்கள் பல உளதென நாட்டியுள்ளார். தவிரவும் பழைய இலக்கண இலக்கியங்கள், பழமொழிகள், சொற்களின் ஆராய்ச்சி, சிலாசனங்கள், முற்காலத்தில் வர்த்தகம் செய்தவர்கள் தங்கள் சரிதங்களிற் குறித்திருப்பன ஆகிய இத்தியாதிகளைக்கொண்டு தமிழருடைய புராதன நிலைமையை ஒருவாறு ஆராய்ந்தறிவித்திருக்கின்றார்.

புத்தகத்திற்கு மூன்று அனுபந்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை முறையே தமிழ்க்கிலக்கிய அகராதி, தமிழ் நூலாசிரியர் அகராதி, தொகை நூல்களைப்பற்றியன. இவை தமிழில் அபிருசியுள்ள மாணாக்கர்களால் மிகுதியும் விரும்பப்படும் என்பதில் ஐயமில்லை.

இனி ஒருங்கே யோசிக்குங்கால், இப்புத்தகம் கல்லூரியிற் கலைபயிலும் மாணாக்கர்கட்குமேயன்றி கற்றுத்தேர்ந்த பண்டிதர்கள் பலருக்கும் சாலவும் பயன்படும் என்று நாம் கூசாமற் கூறுவோம்.

இப்புத்தகத்தின் விலை அணா எட்டே.

Works by T. Ramakrishna.

'Padmini.'—An Indian Romance with an Introduction by the Right Hon'ble Dr. James Bryce, D.C.L., M.P. 'It is a veritable treasury of Hindu Folklore.' Price per copy Rs. 2-8-0.

'Tales of Ind' and other Poems—Rs. 2-8.

Copies can be had from the Secretary—*'Madras Literary Bureau.'*

"THE TAMILS 1800 YEARS AGO."

Rs. Five (5) only, Postage Extra.

1. "The author gives a graphic account of the ancient geography of the land of the Tamils, their early commercial relations with foreign nations, the different peoples who spoke Tamil, the political history of the Tamils, and concludes with a brief and vivid description of their social life, mode of warfare, literature, philosophy and religion. The chapter on Tamil poets and their poem displays the eruditon of the author, and the extent of his research into the vast field of Tamil literature."—*The Madras Mail* (leader of the 13th May 1904.)

2. "For a book of the kind the materials must be collected from various sources, when they are collected they have to be so arranged that the lesson to be drawn and the narrative itself may be clear and of no doubtful import. Mr. Kanakasabhai has accomplished all this and he deserves to be congratulated on the success of his labours. He has rendered a public service of no small value."—*The Madras Standard.*

3. "The history of ancient India dealt with in his publication relates to as far back a period as A.D. 50, and covers nearly a century, in regard to which Mr. Kanakasabhai observes that the Sanskrit Literature is strongly poor, while a considerable portion of the Tamil Literature of that very period has come to us almost intact and reveals to us the condition not only of the Tamils, but also of other races who inhabited the rest of India in that remote age. * * * The book is altogether a unique publication of its kind and is an exhaustive history of a period in Southern India, in regard to which we have scarcely any authentic history, except the historical allusions scattered about in the pages of Tamil Works of antiquity."—*The Madras Times.*

4. "The book will be welcomed as a valuable addition to the Library."—*The Times of Ceylon.*

For copies apply to the Secretary to the 'Madras Literary Bureau,' Broadway, Black Town, Madras.

TAMIL BOOKS.

1. 'தென்னாட்டுச் சிரேட்டர்கள்.' (முதற்பாகம்—இதிலே ஒன்பதின்மர் ஜீவிய சரித்திரங்கள் அவரவர் திருவுருவப் படங்களுடன் நற்றமிழ் இனிய நடையில் எழுதப்பட்டுள்ளன. விலை அணா 12.

2. 'பன்னிரு பெண்மணிகள்':—ஷேக்ஸ்பியர் நாடகமாதர்கள் இன்னோரவர் இதிலே பலவகைப்பட்ட பெண்மணிகளின் சரிதைகள் அடங்கியுள்ளன. பெணபாலார்க்கு மேனாட்டுமாதர் சரிதம் புகட்டுதற் கேற்ற புத்தகம் இதுவே. ஒவ்வொரு மாதும் கையில் ஏற்றுப்படித்துப் புத்தகப்பெட்டியிற் பதனப்படுத்தி வைக்கத்தகுந்த சிறந்த புத்தகம் இதுதான். விலை அணா 6.

3. 'விக்டோரியா மெய்க்கீர்த்தி':—விக்டோரியா மகாராணியார் மீது பாடப்பட்ட புகழ்மாலை இது, இதிலே அரியபெரிய செய்திகள் பல அடங்கியுள்ளன. பிரபந்தம் அகவற்பாவால் அமைந்தது; விக்டோரியாவின் ஜனனமும், சரித்திரமும் நல்லவசனத்தில் எழுதப்பட்டுள்ளன, இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு சகலத்திற்கும் உண்டு. பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜி கனம் சந்திரவர்க்கர் இதற்கோர் இங்கிலீஷ் பாயிரம் எழுதியுள்ளார். இதன் விலை அணா 12. புத்தகங்கள் வி. பி. ல். அனுப்பப்படும்.—

4. இரசாயன சாத்திரம். விலை அணா 6.

5. சத்தியவிஜயம் விலை அணா 4.

முற்குறித்த புத்தகங்களை வேண்டுவோர் மதராஸ் லிடரரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளலாம்.

QUITE A FRESH PUBLICATION.

A PRIMER OF TAMIL LITERATURE.

By M. S. PURNALINGAM PILLAI, B.A.

Price One Rupee, Postage Extra.

OPINIONS.

1. *The Christian Patriot.*—"As the first attempt of its kind the author of this highly interesting volume must have taken great pains in its production. Tamil literature is one of the most ancient of Indian literatures, and the number of works extant is sufficient of itself to indicate its vastness. According to Nakkirar, the revered President of the third *Sangam*, the three *Sangams* seem to have existed for about ten thousand years, presided over by one hundred and ninety-seven kings who sat in judgment on the literary production of nearly eight thousand and seven hundred poets. With traditions and legends such as these, full of improbabilities and contradictions, the author must have spent years of hard study and labour to bring the primer to its present acceptable form.

Tamil literature is divided into the following six ages or periods in the book :—

I. The Age of the Sangams—up to A.D. 100.
II. The Age of the Buddists and Jains—A.D. 100 to 600.
III. The Age of Religious Revival—A.D. 600 to 1100.
IV. The Age of Literary Revival—A.D. 1100 to 1400.
V. The Age of the Mutts—A.D. 1400 to 1700.
VI. The Age of European Culture—A.D. 1700 to 1900.

The author has carefully and with great discrimination chronicled the various poets and works belonging to these periods. The history of each poet with the most interesting anecdote connected with him as well as the contents of the works of each is given in clear and concise language. A study of the Primer will not, we are sure, fail to create an admiration and love for the study of Tamil literature. The interesting feature of the book is its being up to date and the appendix of select works and the list of a hundred choice works in Tamil literature are very useful. * * * It has "infinite riches in a small room."

2. *The Madras Mail*—"The publication, which is in English, is the first attempt of its kind and will be of great help to Students in the High School and College Classes whose Vernacular is Tamil, and also to foreigners like European Missionaries, Civilians, &c., who will have a general idea of the vast literature extant in Tamil * * * The Primer supplies a real want."

3. *The Hindu.*—"Such a systematic treatise has been a long felt want. The book gives a clear idea of the wide range of Tamil literature."

4. *The Madras Times.*—"The author has done a service to his community and the public at large by compressing a great deal of *useful* and *up to date* information in the small compass of 218 pages."

5. *Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E.*—"I have no hesitation in saying it is *a most useful contribution* on a subject which cannot but interest residents of this part of India."

For copies apply to

The Secretary—"Madras Literary Bureau," 10, Broadway, Madras.